REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2023 மே 2 செவ்வாய்க்கிழமை
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 102 | Tuesday 02, May, 2023 | 12பக்கங்கள் | 50/-






படம் – விமல் கருணாதிலக்க

## சரியான தருணத்தில் SLPP மக்களுடன் இணையும்

### இணைந்ததும் உறுதியான தீர்வுகளை எடுப்போம்



மே தின கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சரியான தருணத்தில் மக்களுடன் இணைந்து உரிய தீர்வுகளை மேற்கொள்ள தயாராக உள்ளதாக, முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பொரளை கெம்பல் 04



படம் – நிஸ்சங்க விஜேரத்ன

### நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில்

## இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு



### வருட இறுதிக்குள் உடன்படிக்கை கைச்சாத்து

ஐ.தே.க மே தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டிலுள்ள சகல சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் வகையில், நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த வருடத்தில் உடன்பாடு எட்டப்படுமென எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 04



படம் – கயான் புஸ்பிக்க

## கவனிப்பாரற்ற நிலையில்...

இலங்கையின் "தொழிலாளர் இயக்கத்தின் தந்தை" என்று அழைக்கப்படும் முன்னோடி தொழிற்சங்கத் தலைவர் அமரர் ஏ.ஈ. குணசிங்கவின் உருவச் சிலை நேற்றைய மே தினத்தின் போது தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. கடந்த வருடம் போடப்பட்ட மலர் மாலை காய்ந்து 04

### என் மக்களிடம் மன்னிப்பு கேட்கும் வரை

## சஜித்துடன் பயணத்தை தொடர நான் தயாரில்லை



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

"பதுளை, மடுல்சீமை மக்களிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மன்னிப்புகோர வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஐக்கிய 04

## சமையல் எரிவாயுவின் விலைகளையும் குறைக்க முடியும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சமையல் எரிவாயுவின் விலைகளையும் இன்னும் ஓரிரு தினங்களில் மேலும் குறைக்கமுடியுமென ஜனாதிபதியின் செயலணி பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் குறைவடைந்துள்ளதையடுத்து சமையல் எரிவாயுவின் விலைகளை குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு 04

## நாட்டில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

நாட்டில் மேலும் புதிதாக 07 பேர் கொரோனா தொற்றுக்கு (30) உள்ளாகியுள்ளமை உறுதியாகியுள்ளது. 2020 முதல் இன்று வரை கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 6,72,171 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நேற்று முன்தினமும் 05 பேர் கொரோனா தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். சுகாதார பணிப்பாளர் நாயகம் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### CPC. IOC இரு நிறுவனங்களினாலும்

## எரிபொருள் விலைகள் நேற்று முதல் குறைப்பு

### சுப்பர் டீசல் 135 ரூபாவால் குறைப்பு



எரிபொருட்களின் விலைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் குறைத்துள்ளன. நேற்று முன்தினம் (30) நள்ளிரவு அமுலுக்கு வரும் வகையில் விலைகள் குறை க்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. 04

## நாட்டுக்காக அர்ப்பணிப்பு செய்ய நாங்கள் தயார்

### ஐக்கிய மக்கள் சக்தி மே தினக் கூட்டத்தில் சஜித் உரை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டைக் கட்டியெழுப்ப பெரும் அர்ப்பணிப்புகளை செய்வதற்கு நாம் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். கற்பனைக் கதைகள் மூலம் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாதென குறிப்பிட்ட அவர், கஷ்டமான தீர்மானங்களை மேற்கொள்ள நேரும் என்றும் தெரிவித்தார். கைத்தொழில் துறை மற்றும் தொழில்நுட்பத் துறையை 04

## தமிழ் பேரகராதி 'தமிலெக்ஸ்' ஜேர்மனியில் வெளியாகிறது



ஜேர்மனி அறிவியல் அறிஞர்கள் அகாடமி சார்பில், 'தமிலெக்ஸ்' (Tamilex) எனும் செவ்வியல் தமிழ் மொழிக்கான பேரகராதி வெளியாகவுள்ளது. அனைத்து வார்த்தைகளின் முழு வரலாற்றுடன், 10 கோடி ரூபாவில் இதை ஜெர்மனி வெளியிடுகிறது.

செம்மொழியான தமிழ் மொழி இலக்கியங்களின் தொகுப்புகள், மனிதகுலத்தின் சிறந்த பாரம்பரியத்துக்கு பெரும் 04



### மனைவியை ஊசி செலுத்தி கொல்ல முயன்ற கணவன்

திருகோணமலை டாக்டர் சிக்கினார் 03



### ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் தீர்மானங்களை எடுப்பதற்கான உறுதியான முதுகெலும்பில்லை

ஏ.எச்.எம்.பௌசி எம்.பி பேட்டி 06



### புத்தளம் - கற்பிட்டி பகுதியில் 836 Kg பீடி இலைகளுடன்

02 சந்தேக நபர்கள் கைது 03



ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின ஊர்வலம் அதன் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டரங்கிலிருந்து ஏ.ஈ.குணசிங்க விளையாட்டரங்கை நோக்கி வந்த போது... படம் – ருக்மல் கமகே

## வெள்ளவத்தையில் சிக்கிய நூதன திருடர்கள் இருவர்

### பொலிஸாரால் அதிரடியாக கைது

(தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்)



கொழும்பு நகரில் நீண்டகாலமாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பக்க கண்ணாடிகளை திருடி வந்த இரண்டு சந்தேகநபர்கள், வெள்ளவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடமிருந்து 10 மோட்டார் சைக்கிள்களும் ஒரு முச்சக்கரவண்டியும், வாகன பக்க கண்ணாடிகள் நாற்பதும் 04

## ஊர்காவற்றுறையில் கோர விபத்து; 02 யுவதிகள் சம்பவ இடத்தில் பலி

### காரில் பயணித்த 04 பேர் படுகாயம்



யாழ். ஊர்காவற்றுறை வீதியில் அல்லைப்பிட்டியில் கார் – மோட்டார் சைக்கிளுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்தனர்.

காரில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். 04

# கொழும்பில் நடைபெற்ற பிரதான அரசியல் கட்சிகளின் மே தின கூட்டங்கள்






சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசிய கட்சியின் மேதின நிகழ்வுகள் கட்சி தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் கொழும்பு சுகாதார உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றன. ஜனாதிபதி செயலக பணிக்குழாமின் தலைவரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருமான சாகல ரட்நாயக்க, அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னாண்டோ, ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் விஜேவர்தன, முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார், ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் மேதின நிகழ்வுகள் பதுளை நகரில் நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)



தொழிலாளர் தேசிய சங்கத்தின் 58ஆவது ஆண்டு நிறைவு, மே தினம் என்பவற்றை முன்னிட்டு நேற்று ஹற்றனில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. சிவசுப்பிரமணிய ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் கட்சி தலைமையகத்தில் கட்சி கொடி ஏற்றப்பட்டு, 'கேக்'வெட்டப்பட்டது. இந்நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொது செயலாளர் பிலிப், நிதிச் செயலாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்: ஹற்றன் சுழற்சி நிருபர்)







படம் — சுதத் நிஸ்சங்க, விமல் கருணாதிலக்க

பொதுஜன பெரமுனவின் தொழிலாளர் தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று பொரளை கெம்பள் பார்க் மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



ஜே.வீ.பியின் மேதினக் கூட்டம் கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவில் நடைபெற்ற போது.
படம் — சுலோசன கமகே

# வடக்கின் உதயம்




## அருந்ததியின் 'மாற்று மோதிரம்' மணப்பெண் அலங்காரக் கண்காட்சி



**யாழ். விசேட நிருபர்**

அருந்ததியின் 'மாற்று மோதிரம்' மணப்பெண் அலங்காரக் கண்காட்சி, யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (30) மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அழகுக்கலை நிபுணர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன், இதில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி கேடயங்களும் வழங்கப்பட்டன.

## வடமாகாணத்தில் சுமார் 118,000 குடும்பங்களுக்கு அரச காணிகள்

### ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்திலுள்ளதாக வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**



வடமாகாணத்தில் காணி வசதியின்றி வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள சுமார் ஒரு இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக, அம்மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடமாகாணத்தில் காணி வசதியின்றி வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களுக்கு நன்கொடைக் காணிகளை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஒவ்வொரு குடும்பமும் 10 பேர்ச் கொண்ட அரச காணிக்கு உரிமையாளராக மாறும் பட்சத்தில், அந்தக் காணிகளில் பயன் தரும் மரங்களை அவர்களே அறுவடை செய்யும் உரிமம் வழங்கப்படுமெனவும், ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, காணி வசதியின்றிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு குத்தகைக்கு மற்றும் வீடுகளைக் கட்டுவதற்கு காணிகள் வழங்கும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இம்மாகாணத்தில் சுமார் 4 இலட்சம் மரங்கள், ஒவ்வொன்றுக்கும் 1:5 என்ற விகிதத்தில் கன்றுகளை நாட்டுவதற்கும் புதிய நீர்த் தேக்கங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் காணிகளில் ஏற்கெனவே உள்ள பயன் தரும் மரங்கள் மற்றும் நடுகை செய்யப்படவுள்ள பயன் தரும் மரங்கள் தொடர்பில் இலவசமாக ஆலோசனை வழங்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக மாகாண அமைச்சுகளின் அதிகாரிகள், உள்ளூர் ஆட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச குழுக்கள் இணைந்து பணியாற்றுவதற்கான செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## கோப்பாயில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், கோப்பாய் பிரதேச த்திலுள்ள வாகனங்களை திருத்தும் இடமொன்றில் பணிபுரிந்து வந்த ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (30) மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய செல்வராசா சுஜிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த போது, மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் வட்டக்கச்சியில் ஆசிரியர்களுக்கு செயலமர்வு



சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்கச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நிதி உதவியுடன், வடமாகாணக் கல்வி அமைச்சின் நெறிப்படுத்தலுடன் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான செயலமர்வு, வட்டக்கச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

உளநலம் மற்றும் உளச் சமூகம் சார் சேவைகள் எனும் தொனிப்பொருளின் கீழ் 12 நாட்களாக நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில், 'வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும்' எனும் நியமனங்களை பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள் 45 பேர் கலந்துகொண்டனர்.

பாடசாலை மட்டங்களில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றை முறையாகத் தீர்ப்பதற்கான வழிகாட்டலும் ஆலோசனையும் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமையுடன் (29) நிறைவடைந்த இந்தச் செயலமர்வில் தாம் கற்றுக்கெண்ட விடயங்களை தமது பாடசாலைகளில் ஆசிரியர்கள் முன்னெடுப்பதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமாகணத்தில் மே தின நிகழ்வுகள்

**பருத்தித்துறை விசேட, யாழ். விசேட, வவுனியா விசேட நிருபர்கள்**





யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பிரதேசத்திலும் நேற்று திங்கட்கிழமை (01) மே தின நிகழ்வுகள் நடைபெற்றன. முல்லைத்தீவு, மல்லாவி நகரின் அனிஞ்சியன்குளம் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமாகிய மே தின ஊர்திபவனி, மல்லாவி சிவன் ஆலய வளாகத்தை அடைந்ததுடன், அங்கு மே தினக் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை மே தின வாகன ஊர்வலமொன்று வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

யாழ். மாவட்டச் செயலகத்திலிருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்வலம், கஸ்தூரியார் வீதியில் நிறைவடைந்தது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டமும் ஊர்வலமும் வவுனியாவில் நேற்றுக் காலை நடைபெற்றது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் வவுனியா மாநகர மண்டபத்தை அடைந்ததுடன், அங்கு மேதினக் கூட்டம் நடைபெற்றது.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு கருத்தரங்கு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்துத் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை (28) சாவகச்சேரி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸாரால் நடத்தப்பட்டது. பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

மாணவர்கள் தமது போக்குவரத்து நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விளக்கமளித்தனர்.

# அபிவிருத்தி இலக்கை வெற்றிகொள்வதற்கு பொதுநோக்கத்துடன் ஒன்றிணைவது அவசியம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டின் அபிவிருத்தி இலக்கை வெற்றிகொள்வதற்காக ஆளும் கட்சி பேதங்கள் மற்றும் இன, மத பேதங்களைக் கைவிட்டு பொது நோக்கத்துடன் ஒன்றிணைவது அவசியமென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கம்பளை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரயில்வே மேற்பார்வை முகாமைத்துவ அலுவலகத்தை, உத்தியோக பூர்வமாக திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், அபிவிருத்திகளை மேற்கொள்ளும் தேவையுடைய



தலைவரின் நோக்கத்தின் பிரதிபலனாக அபிவிருத்தி அமைகிறது. பல்வேறு காரணங்களால் நாட்டின் பொருளாதாரம் பின்னடைவுகண்டு மீண்டும் ஒரு வருட காலத்தின் பின்னர் அபிவிருத்தியைப் பற்றி பேசுவதற்கான காலம் உருவாகியுள்ளது. நாடு என்ற வகையில் அபிவிருத்தி நோக்கங்களை வெற்றிபெறுவதற்காக கஷ்டமான பாதையில் பயணிக்கவேண்டியுள்ள இக்காலத்தில், கட்சி பேதம் இன, மத பேதங்களையும் கைவிட்டு பொது நோக்கத்துடன் இணைவது அவசியமாகிறது. நீண்டகாலமாக நாட்டை ஆட்சிசெய்துள்ள அனைத்து அரசாங்கங்களும் சுமக்க முடியாத சுமைகளை சுமந்ததால் தொடர்ந்தும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன்களைப் பெற்றுக் கொள்ள நேர்ந்துள்ளது. தொடர்ந்தும் கடன்களை மீளச் செலுத்துவதற்காக கடன்கள் பெறப்பட்டன. இறுதியில் கடன் பெற்றவர்களுக்கு அதனை மீளச் செலுத்தமுடியாத நிலை நாட்டில் உருவாகியுள்ளது.

அந்தவகையில் மிக மோசமான நிதி நெருக்கடிக்குள் நாடு அகப்பட்டுள்ளது. இந்நிலையில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான முறைமையோ அல்லது அனுபவமோ எமது

04

## வலம்புரி கவிதா வட்டத்தின் 87 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 87 ஆவது கவியரங்கு 06/05/2023 சனி க்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி தலைமையில் கவியரங்கு இடம்பெறும்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447, இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வெசாக் பண்டிகை; மது, மீன் இறைச்சி கடைகளுக்கு பூட்டு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வெசாக் பண்டிகையையொட்டி மூன்று தினங்களுக்கு மதுபான நிலையங்கள் மற்றும் மீன், இறைச்சிக் கடைகள் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மது விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளதாக, கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் மூன்று தினங்களுக்கு மீன், இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வெசாக் பண்டிகை தினமான எதிர்வரும் மே (05) மற்றும் அதனை அடுத்து வரும் மேலும் இரண்டு தினங்களான 06,07 ஆம் திகதிகளில் மதுபான சாலைகள் மற்றும் மீன், இறைச்சி விற்பனை நிலையங்களும் மூடப்படவுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் மே 05, 06,07 ஆகிய மூன்று தினங்களிலேயே மதுபான சாலைகள் மற்றும் மீன், இறைச்சி விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தொழிலாளர் சமூகத்தை கௌரவித்த பெருமை ஐக்கிய தேசிய கட்சிக்கே உண்டு

## மே தினக் கூட்டத்தில் கட்சியின் பிரதி தலைவர்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தொழிலாளர் சமூகத்தை ஆர்ப்பாட்டங்களுக்குள் சிக்கவைக்காத ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே என, கட்சியின் பிரதித் தலைவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் நன்மைகளுக்காக அனைத்து பிரதிபலன்களையும் அவர்களுக்கு பெற்றுக் கொடுத்து சிறந்த வாழ்க்கையை மேற்கொள்வதற்கான நிலையை தோற்றுவிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எல்லாக் காலத்திலும் செயற்பட்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கல்விக்கான உரிமை உட்பட தொழிற்சங்க உரிமையையும் பெற்றுக் கொடுத்தது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் மட்டுமே. மத்திய மகா வித்தியால முறைமையை உருவாக்கி தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு எமது கட்சியே நடவடிக்கை எடுத்தது.

தொழிலாளர் சமூகத்தை அடிமைகள் போன்று ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்துவதற்கு சில கட்சிகள் நடவடிக்கை எடுத்தன. அவர்களது அரசியல் நோக்கங்களை அடைவதற்கே அவ்வாறு அக்கட்சிகள் தொழிலாளர்களை பயன்படுத்துகின்றன. ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் அவ்வாறு செயற்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



நாட்டின் இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதியான மறைந்த ரணசிங்க பிரேமதாசவின் 30 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று (01) புதுக்கடையில் இடம்பெற்றன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் மறைந்த ஜனாதிபதியின் பாரியார் ஹேமா பிரேமதாச ஆகியோர் அமரர் ரணசிங்க பிரேமதாசவின் உருவச்சிலைக்கு மாலையணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.
(படம்: கயான் புஸ்பகுமார, வாசித பட்டபெந்திகே)

### புத்தளம் கற்பிட்டி பகுதியில்

## 836 Kg பீடி இலைகளுடன் 02 சந்தேக நபர்கள் கைது

புத்தளம் கற்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 836 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகளுடன் இருவரை கைதுசெய்துள்ளதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.



நேற்றுமுன்தினம் (30) இரவு மற்றும் நேற்று (01) அதிகாலை கற்பிட்டி, பராமுனை மற்றும் குடாவ கரையோர கடற்பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

வடமேற்கு கடற்படை கட்டளை பிரிவினரால் பராமுனை கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின்போது, சந்தேகத்துக்கிடமான படகுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அதன்போது, படகிலிருந்து 550 கிலோ 750 கிராம் பீடி இலைகளும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் 18 மற்றும் 23 வயதுடைய கற்பிட்டி அனவாசலை பிரதேசத்தை சேர்ந்தவர்களென தெரியவந்துள்ளது.

இதேவேளை, (01)

04

## மனைவியை ஊசி செலுத்தி கொல்ல முயன்ற கணவன்

### திருகோணமலை டாக்டர் சிக்கினார்

தனது இளம் மனைவிக்கு பலவந்தமாக இன்சுலின் ஊசியை செலுத்தி கொலை செய்ய முயற்சித்த டாக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே இவ்வாறு மனைவியை கொலை செய்ய முயற்சித்துள்ளார். பம்பலப்பிட்டி பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், அவரை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகப்படியான இன்சுலின் ஊசி ஏற்றப்பட்டதால் மயக்கமடைந்த பெண் ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

04


சக்தி அமைச்சு

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**Provision of Technical Services for Aviation Fuel Handling and Into-Plane Operations B/02/2023**

**நீடிப்பு அறிவித்தல்**

மேலேயுள்ள தலையங்கத்தின் கீழ் இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக விலைமனுக்கோரல் ஆவணங்களை ஏற்கனவே கையேற்றுக் கொண்டவர்களும் விலைமனுக்கோரல் முன்னெடுத்துச் செல்லலில் பங்கேற்பதற்கு ஆர்வமுள்ள வளமுள்ள விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

2023.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக நிருணயிக்கப்பட்ட இறுதித்தினமானது 2023.05.10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னைய விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**முகாமையாளர்(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094 11 5455331**
**தொலைநகல்: 0094 11 5455424**



**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுகோரல்**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**
**பகிரங்க கேள்விமனு - 4467T**
**சுத்திகரிப்பின் வெப்பப் பரிமாற்றத்திற்கான பாகங்களை (SPARES FOR HEAT EXCHANGER) வழங்கல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சுத்திகரிப்புப் பிரிவு, சபுகஸ்கந்த, களனி, இலங்கையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் உற்பத்தியாளர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட உள்நாட்டு பிரதிநிதிகளிடம் இருந்து விலைமனுக் கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவான மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களை வழங்குவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

யாரேனும் விலைமனுதாரர், விலைமனு சமர்ப்பிப்பதாயின் விண்ணப்பத்திற்காக மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 தொகையை 2023 மே 19 ஆம் திகதி 1500 மணி வரை அலுவலக நாட்களில் இலக்கம் 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 என்ற இடத்தில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் 05ஆவது மாடியில் காசாளருக்கு அல்லது சுத்திகரிப்புப் பிரிவு, சபுகஸ்கந்த, களனியில் காசாளருக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்து பணமாக செலுத்த வேண்டும் என்பதோடு, அனைத்து கொடுப்பனவுகளும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110 208633 என்ற மக்கள் வங்கியின் கணக்கு மூலம் கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணமாக செலுத்த முடியும்.

விலைமனுக்கோரல் ஆவணத்தின் நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளை www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.comஎன்ற இணையதளங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

மேலும் கேள்விமனு ஆவணத்தை கீழ் குறிப்பிடப்பட்டவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்கள், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2023 மே 24 ஆம் திகதி 1430 மணிக்கு ஏற்கப்படும் என்பதோடு அந்த சந்தர்ப்பத்திலேயே சுத்திகரிப்பு பயிற்சி கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி.**
**தொ.பே. 011 2 400110**
**மின்னஞ்சல்** ref.materials@ceypetco.gov.lk



**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுகோரல்**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**
**பகிரங்க கேள்விமனு - 4476T**
**பின்னிட் குழாய் (FINNED TUBE) வழங்கல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சுத்திகரிப்புப் பிரிவு, சபுகஸ்கந்த, களனி, இலங்கையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் உற்பத்தியாளர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள அவர்களின் அதிகாரம் பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட உள்நாட்டு பிரதிநிதிகளிடம் இருந்து விலைமனுக் கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவான மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களை வழங்குவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

யாரேனும் விலைமனுதாரர், விலைமனு சமர்ப்பிப்பதாயின் விண்ணப்பத்திற்காக மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 தொகையை 2023 மே 19 ஆம் திகதி 1500 மணி வரை அலுவலக நாட்களில் இலக்கம் 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 என்ற இடத்தில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் 05ஆவது மாடியில் காசாளருக்கு அல்லது சுத்திகரிப்புப் பிரிவு, சபுகஸ்கந்த, களனியில் காசாளருக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்து பணமாக செலுத்த வேண்டும் என்பதோடு, அனைத்து கொடுப்பனவுகளும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற மக்கள் வங்கியின் கணக்கு மூலம் கேள்விமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணமாக செலுத்த முடியும்.

விலைமனுக் கோரல் ஆவணத்தின் நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளை www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் கேள்விமனு ஆவணத்தை கீழ் குறிப்பிடப்பட்டவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்கள், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2023 மே 24 ஆம் திகதி 1430 மணிக்கு ஏற்கப்படும் என்பதோடு அந்த சந்தர்ப்பத்திலேயே சுத்திகரிப்பு பயிற்சி கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி.**
**தொ.பே. 011 2 400110**
**மின்னஞ்சல்** ref.materials@ceypetco.gov.lk



National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.04.30
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5102
ரூ. 15.266.921.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 0 8 5 3 8 0

சீட்டிழுப்பு இலக்கம் 411
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,587,403.60
வெற்றி இலக்கங்கள் 13 14 23 60

கொவிசெத
3344
ரூ. 99,997,947.84
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 49 55 61 70

மெகா பவர்
1450
ரூ. 318,236,166.00
W 08 36 43 60 75
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1557
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,445,211.60
வெற்றி இலக்கங்கள் 0 7 7 1 9 4

தன நிதானய
1132
ரூ. 88,165,336.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 01 30 37 59



**அறிவித்தல்**

**இப்பாகமுவ பிரதேச சபை**

**2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்ட முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல்**

2024 ஆம் ஆண்டுக்காக இப்பாகமுவ பிரதேச சபையின் நிகழ்ச்சிகளை வரவு - செலவுத் திட்ட ஆவணத்தை தயாரிப்பது தொடர்பில் அதிகார பகுதியின் பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புகளிடம் இருந்து அதிகாரப் பகுதியின் அபிவிருத்தி செயற்பாடுகள் சார்ந்த முன்மொழிவுகள் 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுத்தரும்படி தயவுடன் கோரப்படுகிறது.

**எஸ்.டீ.டி. விமலசேன,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, இப்பாகமுவ.**
**தொலைபேசி இலக்கம் - 037-2259977**



**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**

**வாகனங்களை வாடகைக்கு பெறுவதற்கான விலைமனுக் கோரல்**
**2023 – 2024 ஆம் ஆண்டு**

தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் 2023 ஜூன் மாதம் தொடக்கம் 2024 ஜூன் மாதம் வரை சேவையில் ஈடுபடுத்துவதற்காக 05 வேன்கள், 02 முச்சக்கர வண்டிகள் மற்றும் 01 டிரக் வண்டியை வாடகைக்குப் பெறுவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த கேள்விமனு படிவத்தை கட்டணமாக மீளளிக்கப்படாத 500 ரூபா மற்றும் அரச வரித் தொகைகளையும் செலுத்தி 2023.05.03 ஆம் திகதி தொடக்கம் 2023.05.18 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் நிதித் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் 0712937199 ஊடாக தலைமை இயந்திரப் பொறியியலாளரை அழைக்கவும்.

**எம்.எம்.சி.கே.கே. மான்னப்பெரும்**
**நகர ஆணையாளர்,**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை.**

# U.S.A விசா வழங்கலை நவீன மயமாக்க திட்டம்

## எச்1பி வகை வீசா நவீன மயமாகுறது

வெளிநாடுகளிலுள்ள திறமையான பணியாளர்கள் தங்கள் நாட்டில் வந்து பணிபுரிவதற்கென அமெரிக்காவில் எச்1பி வகை விசா வழங்கப்படுகின்றது.

இந்தியா, சீனா போன்ற நாடுகளிலுள்ள திறமை வாய்ந்த பணியாளர்களை வேலையில் அமர்த்துவதற்கு இந்த விசாவையே அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் பெரிதும் நம்பியுள்ளன. இந்த விசாவைப் பெற்றுக்கொண்டவர்கள் 06 ஆண்டுகள் கழித்து நிரந்தர குடியுரிமை அல்லது கிரீன் கார்டு பெற முடியும். இந்த நிலையில் எச்1பி விசா வழங்குவதில் சில நிறுவனங்கள் முறைகேட்டில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்க அரசாங்கத்துக்கு தொடர்ந்து தகவல் கிடைத்து வருகின்றன.

# தொலைக்காட்சி நாடக நடிகர் ஜி. ஆர். பெரேரா காலமானார்



இலங்கையின் பிரபல தொலைக்காட்சி நாடக நடிகர் ஜி. ஆர். பெரேரா தனது 83 ஆவது வயதில் நேற்று காலமானார்.

நீண்ட நாட்களாக சுகவீனமுற்றிருந்த அவர், நேற்று (01) காலை தனது வீட்டில் காலமானதாக உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

சுமார் 05 தசாப்தங்களுக்கு மேல் 600 க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நாடகங்களில் நடிகர் பெரேரா நடித்துள்ளமை குறிப்படத்தக்கது.

# இறைவரி திணைக்கள வருமானம் இலக்கை விடவும் அதிகரிப்பு

வருடத்தின் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானம் இலக்கையும் தாண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தின் முதல் காலாண்டில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலக்கு, வருவாயை விட 105% வீதமாக வருமானம் ஈட்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். ஊராபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

முதல் காலாண்டில் எதிர்பார்த்த வருவாயில் 19% மட்டுமே ஈட்டப்பட்டுள்ளதாக தேசிய நாளிதழொன்று குறிப்பிட்டுள்ளது. இந்த செய்தி முற்றிலும் தவறானதென அமைச்சர் கூறினார்.

# மின்சார விற்பனை 4.6 வீதம் குறைவு சபைக்கு ரூ. 272. 9 பில்லியன் நட்டம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**




மின்சார விற்பனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 4.6 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மின்சார துண்டிப்பு மற்றும் உற்பத்திக்கான செலவுகளே கேள்வி குறைந்தமைக்கு காரணமெனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. குடிசைக் கைத்தொழில் துறைக்கான மின்சாரத்தின் கேள்வி நூற்றுக்கு 3.7வீதம் குறைவடைந்துள்ளதுடன் ஹோட்டல் மற்றும் பொதுச் சேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப்படும் மின்சாரத்தின் அளவு 11. 7 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த வருடத்தில் மின்சார சபை,272 . 9 பில்லியன் ரூபா நட்டமீட்டியுள்ளதாக பதிவாகியுள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முச்சக்கர வண்டிகளின் கட்டணம் குறையாது



எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டிகளின் கட்டணத்தை குறைக்க முடியாதென முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ஏழு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் முச்சக்கரவண்டிகளின் கட்டணத்தில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாதென தேசிய ஒன்றிணைந்த முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் கைத்தொழில் தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தி இலக்கை...

03ஆம் பக்கத் தொடர்

நாட்டுக்கு இல்லாமற்போனது. அத்தகைய சந்தர்ப்பத்திலேயே நிதி நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான தீர்வை முன்வைக்கக்கூடிய 28 சர்வதேச நிறுவனங்கள் முன்வந்தன. அவற்றில் 20 நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கான தகைமை நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அவற்றில் மிக பொருத்தமான நிறுவனமொன்றை தெரிவுசெய்வதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸும் உள்ளடங்கினார். அந்தக் குழுவில் பரிந்துரைக்கமைய பிரான்ஸ் நிறுவனமொன்றுக்கு அந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 836 Kg பீடி இலைகளுடன்...

03ஆம் பக்கத் தொடர்

அதிகாலை குடாவ கடற்கரையில் மேற்கொண்ட தேடுதலின்போது, சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த பீடி இலைகள் அடங்கிய 09 பைகள் மீட்கப்பட்டன.

அவற்றிலிருந்து 286 கிலோ 200 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டன. மொத்தம் 836 கிலோ 950 கிராம் பீடி இலைகளுடன் சந்தேக நபர்களும் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

## மனைவியை ஊசி செலுத்தி...

03ஆம் பக்கத் தொடர்

திருமணமாகி சில காலம் கடந்தும் குழந்தை இல்லாத காரணத்தால் மனைவி, மருத்துவரான கணவரிடம் அடிக்கடி தகராறு செய்து வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் அடிக்கடி வீட்டுக்கு வருவதை கணவர் தவிர்த்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்குரிய வைத்தியரான கணவர், மனைவியை கொல்லும் நோக்கில் இவ்வாறு செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். உடலில் சக்கரை அளவைக் குறைக்க மனைவியின் உடலில் இன்சுலின் ஊசியை வலுக்கட்டாயமாக செலுத்தி மனைவியைக் கொல்ல முயன்றதாக பொலிஸ் வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் சந்தேகநபரான வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கவனிப்பாரற்ற நிலையில்...

சருகாகிப் போய்க்கிடந்தது. மலர்ச் செண்டு வைக்க எவரும் இல்லை. அஞ்சலி செலுத்த யாரும் வரவு மில்லை. ஆனால் அன்னாரது பேத்தியார் மட்டும் மறக்காது தன் பாட்டனாருக்கு மலர்ச் செண்டு வைத்து அஞ்சலி செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

## சமையல் எரிவாயுவின் ....

வருகிறது. இரண்டொரு தினங்களில் அந்த விலைகள் குறைவடையலாம் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டில் 70% மாக காணப்பட்ட பணவீக்கம் தற்போது 35% மாக குறைவடைந்துள்ளது. அந்தவகையில் இந்த வருட நடுப்பகுதிக்குள் அதனை தனி இலக்கத்துக்கு கொண்டுவர முடியும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எரிபொருட்களின் விலைகள் மேலும் குறைவடைந்துள்ளன. மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ஒரிரு தினங்களில் சமையல் எரிவாயுவின் விலைகளையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்காக அர்ப்பணிப்பு...

நவீனமயப்படுத்தி நாம் நாட்டைக் கட்டி யெழுப்ப அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளத் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

'ஸ்ரீலங்கா First ' என்பதே எமது வேலைத் திட்டம். அந்த திட்டத்தின் மூலம் உலகின் முதல் தர நாடாக இலங்கையை உயர்த்துவதே எமது நோக்கம்.

நாட்டு மக்களை பாதிக்காத வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் ஒத்துழைப்பு தொடர்பில் நாம் புதிதாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்போம். கடனை மீள செலுத்த முடியாத அரசாங்கம் இது.

நாம் எதிர்வரும் ஜூன் 16ஆம் திகதி முதல்

எமது அனைத்து தேர்தல் தொகுதிகளையும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம். அனைவருக்கும் பலம், அனைவருக்கும் செளபாக்கியம் நிறைந்த நாட்டை நாம் கட்டி யெழுப்புவோம். அதற்காக எம்மோடு கைகோர்க்க இணையுமாறு நான் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## வெள்ளவத்தையில்...

மீட்கப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

திருடப்படும் கண்ணாடிகளை விற்பனை செய்த பஞ்சிகாவத்தை பகுதியைச் சேர்ந்த வியாபார நிலைய உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொட பகுதியை சேர்ந்த 35 மற்றும் 39 வயதுடையவர்களென தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக கொழும்பு நகர பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை நூதனமாக திருடிய இவர்கள், மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் பக்க கண்ணாடிகளை விற்பனை செய்து வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.இது தொடர்பில் பல்வேறுபட்ட முறைப்பாடுகளும் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

இதையடுத்து வெள்ளவத்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அணியினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## எரிபொருள்...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில்★92 ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை, 07 ரூபாவால் குறைக்கப்பட்டு 333 ரூபாவாகியுள்ளது.

★95 ஒக்டேன் பெற்றோல் 10 ரூபாவால் குறைந்து 365 ரூபாவாகவும், டீசல் 15 ரூபாவால் குறைந்து 310 ரூபாவாகவும், ★சுப்பர் டீசல் 135 ரூபாவால் குறைக்கட்டு புதிய விலை 330 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தத்துக்கு அமைவாக, லங்கா ஐஓசி நிறுவனமும் தமது எரிபொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

அதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை ஏழு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 333ரூபாவாகியுள்ளது. அதேபோல், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதால், புதிய விலை 365 ரூபாவாகியுள்ளது. மேலும், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதால் புதிய விலை 310 ரூபாவாகியுள்ளது.

## ஊர்காவற்றுறை...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் இருவரே மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் காருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றைய பெண் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்கையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

காரில் பயணித்த மானிப்பாயைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சஜித்துடன் பயணத்தை...

மக்கள் சக்தியுடன் பயணத்தை தொடர்வதற்கு நான் தயாரில்லை." ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தின கூட்டம் பதுளையில் நேற்று (01) நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையிலேயே வடிவேல் சுரேஷ் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, " நாட்டில் தேசிய கொள்கைத்திட்டம் பற்றி பேசப்படுகின்றது. அவ்வாறு கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும்போது, மலையக பெருந்தோட்ட மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். இந்நிலைமையை இனியும் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இலங்கை பிரஜைகள்தான். அவர்களுக்கு எதற்காக ஓரவஞ்சனை காட்டப்படுகின்றது? இலங்கை மக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளும் எமது மக்களுக்கும் வேண்டும்.

எமது மக்கள் பயங்கரவாதிகள் அல்லர். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவில்லை. நாட்டின் வன்முறைகளில் ஈடுபட்டதில்லை. நாடு மேம்பட உழைத்த அவர்களுக்கு ஏன் புறக்கணிப்பு? இன்னும் காணி உரிமையற்றவர்களாக வாழ்கின்றனர். எங்கள் மக்களுக்கு உண்ண உணவில்லை, பாதுகாப்பாக வாழ காணி இல்லை. மக்கள் இப்படி தவிக்கையில் எனக்கு கட்சி, சின்னம் என்பன முக்கியம் இல்லை.

தற்போதைய சூழ்நிலைக்கமைய நாட் சம்பளமாக மூவாயிரத்து 250 ரூபா வழங்கப்பட வேண்டும். பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. எனவே, அந்த தொகையை வழங்குமாறு கம்பனிகளுக்கு ஜனாதிபதி கட்டளையிட வேண்டும். அதேவேளை, எமது மக்களை செல்லாக்காசாக கருத வேண்டாமென எமது கட்சி தலைவர் சஜித்திடம் கூறுகின்றேன். அவர் மடுல்சீமை கூட்டத்துக்கு வரவில்லை. ஆக மடுல்சீமைக்கு வந்து அவர் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். இல்லையேல் சஜித்துடன் எனது பயணம் தொடராது." என்றார்.

## சரியான தருணத்தில்...

மைதானத்தில் நடந்த ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் தலைமை உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

தொழிலாளர் அபிலாசைகளுக்கு முதலிடமளித்துள்ள நாம்,சகல காலங்களிலும் தொழிலாளர்களின் உரிமையை வென்றெடுக்க முக்கியத்துவம் வழங்கியுள்ளோம்.

எமது செயற்பாடுகள் தொடர்பில் சில சக்திகள் விமர்சனங்களை மேற்கொள்கின்றன. இது, அவர்களது அரசியல் நோக்கமாக உள்ளது. எதிர்க்கட்சியினருக்கு பேசுவதற்கென எந்த விடயமும் கிடையாது. அவர்கள் பேசுவதை நாம், தற்போது மௌனமாக கேட்டு வருகிறோம். மக்களே எதையும் தீர்மானிப்பர்.

2004 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் ரிமோட் எம்மிடமே உள்ளது என கூறியவர்கள் முடிவில் எதனை சாதித்தனர். இதை, நாம் அனைவரும் அறிவோம்.

தொழிலாளர்களின் அபிலாசைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் உரிய நடவடிக்கை எடுப்போம். நான் தொழில் அமைச்சராக பதவி வகித்த போது, தொழிலாளர்களுக்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தினேன்.

நாட்டின் அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்கினர்கள். நாம் தொழிற்சங்க தலைவர்களுடன் பேசி பல தீர்மானங்களை மேற் கொண்டோம்.தொழிலாளர்களுக்கு இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான சூழலை நாம் ஏற்படுத்தினோம்.

ஜனநாயகத்திற்கு மாறாக அதிகாரத்தை கைப்பற்ற நினைப்பது முறையற்றது. அது ஒரு போதும் முறையானதல்ல. விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. அதனால் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

அதில், அனைத்து ஆசிரியர்களும் சம்பந்தப்படவில்லை. எவ்வாறெனினும் நாம் மாணவர்களை பணயக் கைதிகளாக வைத்து மேற்கொள்ளும் போராட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் பேரகராதி...

பங்களித்து வருகின்றனர். இருப்பினும் இவற்றை இன்னும் மேற்கத்திய நாடுகள் அதிகம் அறியாமலேயே உள்ளன. இதனால், சிறப்புமிக்க செவ்வியல் தமிழ் மொழி மீது இந்தியாவை விட, வெளிநாடுகளில் அதிக ஆர்வம் காட்டப்படுகிறது.

இதன் தாக்கமாக, 'தமிலெக்ஸ்' எனும் முதல்வகை செவ்வியல் தமிழ் பேரகராதி ஜேர்மனியில் வெளியாக உள்ளது. இதற்காக அந்நாட்டின் ஜேர்மனிய அறிவியல் அறிஞர்கள் அகாடமி 10 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது.

இதன் பொறுப்பு, ஜேர்மனியின் ஹம்பர்க் பல்கலைக்கழகத்தின் இந்தியா, திபெத் கலாசாரம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி மைய்ய ஓலைச்சுவடிப் பிரிவின் பேராசிரியர் ஈவா வில்டன் என்பவரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இவர், தமிலெக்ஸ் பேரகராதி உருவாக்கம் பற்றிய அதிகாரப்பூர்வமானத் தகவலை, ஜேர்மனியின் ஹம்பர்கில் கடந்த ஏப்ரல் (22) நடைபெற்ற தமிழ் வருடப் பிறப்பு விழாவில் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து, ஹம்பர்க் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் ஈவா வில்டன் கூறும்போது, ''இத்திட்டத்தில் சங்க இலக்கியத்தின் மொழிபெயர்ப்பு மற்றும் முழுமையான சொல் அகராதி அடங்குகின்றமை போற்றுதலுக்குரியது. இதனால் தற்கால தலைமுறையினர் சங்க இலக்கியங்களையும் எளிமையான முறையில் கற்கும் வாய்ப்பு ஏற்படுவது திண்ணம்'' என்று தெரிவித்தார்.

இதுபோல், தமிழுக்கான அகராதிகள் பல உள்ளன. இதில் முக்கியமானதாக சென்னை பல்கலைக்கழகம் சார்பில் வெளியான 07 தொகுதிகள், பேரகராதியாகக் கருதப்படுகின்றன.

கடந்த 1930ஆம் ஆண்டுகளிலேயே முடிக்கப்பட்ட இந்த பேரகராதியில், தமிழ் சொற்களுக்கான அர்த்தங்கள் உதாரணங்களுடன் வழங்கப்பட்டுள்ளன. முதல் 20 நூற்றாண்டுகளின் தமிழ் சொற்கள் இடம்பெற்ற இந்த பேரகராதி வெளியான பிறகும் பல சங்க இலக்கிய நூல்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதனால், 1930ஆம் ஆண்டுகளுக்கு பின் பதிப்பானவற்றின் குறிப்புகள் இந்த பேரகராதியில் இல்லை. இந்த பேரகராதி சிகாகோ பல் கலைக்கழகம் சார்பில் டிஜிட்டல் பதிப்பாகவும் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், இதுவரை பதிப்பிக்கப்பட்டதில், முதல் பத்து நூற்றாண்டுகளின் செவ்வியல் தமிழ் இலக்கியங்களின் சொற்கள், அதற்கான அர்த்தங்களுடன் ஜேர்மனியின் பேரகராதியில் வெளியாக உள்ளன. இந்த சொற்கள் ஆரம்பம் முதல் கடைசி வரை எத்தனை இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளதோ, அத்தனையும் அதன் பொருளுடன் பேரகராதியில் பதிக்கப்பட உள்ளது. சுமார் 24 ஆண்டுகால திட்டமான இந்த தமிலெக்ஸ் பணியில் தமிழகத்திலும் சில பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இந்த அகராதி அச்சு வடிவிலும் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக, இணையத்தில் பயனாகும் வகையில், டிஜிட்டல் வடிவில் வெளியாக உள்ளது.

ஐரோப்பாவின் தற்போதைய ஒரே தமிழ்ப் பேராசிரியரான முனைவர் ஈவா வில்டன், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 2015ஆம் ஆண்டுக்கான குடியரசுத் தலைவர் விருதான குறள் பீடம் விருதை பெற்றவர். புதுச்சேரியின் இந்தோ நாடுகளுக்கான பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் தமிழ்ப் பிரிவின் தலைவராகவும் இருந்தவர். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறின் 1120 பாடல்களான கழிநியானன நிரை ஆய்வவற்றின் செம்பதிப்புகளை தலா 03 தொகுதிகளாக ஈவா வில்டன் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சினைக்கு...

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று (01) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினூடாக ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்விற்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"2048 வெல்வோம்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மேதிக் கொண்டாட்டத்தில் 68 பல்வேறு தொழில் சார் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வடக்கு, கிழக்கு உட்பட சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஆசியாவின் இரண்டாவது வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை கட்டியெழுப்பிய டீ.எஸ். சேனாநாயக்கவினதும் திறந்த பொருளாதாரத்தில் நாட்டை முன்னோக்கி கொண்டு சென்ற ஜே.ஆர். ஜயவர்தனவினதும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் இலங்கை மீளக் கட்டியெழுப்பப்படுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு என்ற ரீதியில் முன்னோக்கிப்பயணிப்பதற்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியுள்ளது. பாராளுமன்றமே அரசாங்கம் என்ற பொறிமுறைக்குள் செயற்படாது, தூரம் செல்வதால் எந்தப் பயனும் இல்லையென்பதை தமிழ் கட்சிகளிடம் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனது முயற்சி அரசியல் அல்ல. நாட்டின் பொருளாதாரத்தை முறையாகக் கையாள்வதும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுமே எனது முயற்சி.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு, அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் காரணமாகவே நாம் முன்னோக்கிச் செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட்டது.

அதனை அமுல்படுத்தி 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதே எனது இலக்கு. மொத்த தேசிய உற்பத்தியை ஆண்டுக்கு 6 7 சதவீதம் என்ற அளவில் விரைவாக் கொண்டு வரக் கூடிய பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும்.

2048 இல், நூறாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை மாற்றமடைந்திருக்க வேண்டும்.

குறுகிய கால அரசியல் பற்றி சிந்திக்காது 2048 ஐ, பற்றி சிந்திக்க வேண்டும். மீண்டும் பாராளுமன்றத்துக்கான மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள புதிய பாதையில் பயணிக்க வேண்டும்.

இனப்பிரச்சினை விடயத்தில் தூரம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என தமிழ் கட்சிகளிடம் தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமெனில் பாராளுமன்றமே அரசாங்கம் என்ற பொறிமுறைக்குள் செயற்படுவதற்கு அழைப்பு விடுகின்றேன்.

"எனது உந்துதல் அரசியலில் வேரூன்றவில்லை, மாறாக நாட்டின் பொருளாதாரத்தை சரியான முறையில் நிர்வகித்தல் மற்றும் குடிமக்கள் மீதான சுமைகளைக் குறைப்பதில் இருக்கிறது.

"இந்த காரணத்துக்காக, நான் ஜனாதிபதியின் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டேன், பொருளாதாரத்தை மீட்டெடுக்க மற்றும் அதனை அடைய ஆதரவான அமைச்சர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான எனது திறனில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

சுதந்திரம் அடைந்து நூற்றாண்டை அடையும் 2048 ஆகும் போது இந்தியா 2047 இலும் சீனா 2049 இலும் சாதிக்க எதிர்பார்ப்பது போன்று, அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் கொண்ட நாடாக மாறுவதே இலங்கையின் இலக்காக இருக்க வேண்டும்.

அத்துடன், 2048 இலங்கையின் அபிவிருத்திக்கான ஆண்டாகும். தற்போதைய சந்ததியினருக்காக மட்டுமல்லாது எதிர்கால இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்காகவுமே இந்நாட்டை கட்டியெழுப்புகிறோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் போது, நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண உத்தேசித்துள்ளோம்.

அனைத்து சமூகங்களின் உரிமைகளை மதித்து, பாதுகாத்து முன்னேறுவது முக்கியம். இதனால், இந்த ஆண்டு இறுதிக்குள் பரஸ்பர இணக்கமான தீர்வை எட்ட உத்தேசித்திருக்கிறோம். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் தூரமாகியிருப்பது வீணாகும். சகல சமூகங்களையும் உள்ளடக்கிய நியாயமான, புதிய, போட்டித்தன்மையுள்ள மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.





# மே மாதாவின் மேன்மை மிகு வணக்க மாதம்

வருடம்தோறும் மே மாதம் திருச்சபையின் தாயும் நம் ஆண்டவர் இயேசுவின் தாயும் நம் அனைவரினதும் தாயுமான அன்னை மரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

அன்னை மரியாளுக்கான வணக்க மாதம் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அது பதினேழாம் நூற்றாண்டிலேயே இயேசு சபையால் ஊக்குவிக்கப்பட்டது. அதன் பின் 1859 ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பியூஸ் அவர்களால் அந்த பக்தி முயற்சியில் ஈடுபடுபடுவோருக்கு முழுமையான பலன் வழங்கப்பட்டது.

1965 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுல் அமைதிக்காக செபிப்பதற்கு மரியாளின் மாதத்தை பயன்படுத்த அறிவுறுத்தினார். அதற்காக சுற்று மடல் ஒன்றையும் அவர் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் மே மாதத்தை மரியாளின் மாதமாக பிரகடனப்படுத்தி அந்த மாதத்தில் பல்வேறு வழிபாடுகள் மற்றும் பக்தி முயற்சிகளோடும் அந்த மாதத்தை சிறப்பிப்பதற்கு அழைப்பு விடுத்தார்.

அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள மே மாதத்தில் ஆலயங்களில் விசேட வழிபாடுகள், தியானங்கள், பக்தி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதுடன் விசுவாசிகள் தமது வீடுகளில் செபமாலையை தியானித்து,மாதாவின் திருச்சுரூபத்தை ஆலயங்களில் இருந்து இல்லங்களுக்கு எடுத்துச் சென்று விசேட வழிபாடுகளையும் மேற்கொள்வது வழக்கமாகி வருகின்றது.

அந்த வகையில் இம்முறை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மே மாதத்தில் இறை மக்கள் அனைவரும் அன்னை மரியாள் மீது தங்களுக்குள்ள ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் சிறப்பாக வெளிப்படுத்தும் விதமாக செபமாலை செபித்து இந்த மாதம் முழுவதையும் சிறப்புச் செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

நம் அன்னையாம் மரியாளின் இதயத்தோடு இணைந்து ஆண்டவர் இயேசுவின் திருமுகத்தை தியானிக்கும் போது அது ஒரே ஆன்மீக குடும்பமாக அதிக அதிகமாக ஒன்றிணையும் குடும்பமாகவும் விசுவாசத்தில் வளர்வதுடன் நாம் எதிர்கொள்ளும் சோதனைகளிலிருந்து மீள்வதற்கும் அது உதவும் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

வைகாசி நமக்கொரு தாய் இருக்கின்றார். நம்மை என்றும் காக்கின்றார் என்று சிந்திக்கும் மாதமிது.

“அருள் நிறைந்தவளே வாழ்க ஆண்டவர் உம்முடனே” என கபிரியேல் வான தூதர் மரியாளைப் புகழ்கின்றார். (லூக் 1:28) இறைவன் வாசம் செய்ய தேர்ந்து கொண்ட திருக்கோயில் நம் தாய் மரியாள். பெண்ணினத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட பேரரசி நம் பிரியமுள்ள அன்னை அவரை அன்புடன் நினைத்து நெஞ்சாரப் புகழ்வது நம் எல்லோரதும் கடமை.

மரியாள் மணமாகாமலே தாயாக வேண்டுமென்பது இறைவன் வகுத்த நியதி அவள் மறுப்பேதும் கூறவில்லை. “இதோ ஆண்டவருடைய அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று இறை சித்தத்திற்கு பணிந்தவள்.

மாதா பரிசுத்த ஆவியின் அருட்பொழிவை முழுமையாகப் பெற்று ஆண்டவர் இயேசுவை தன் உதரத்தில் தாங்கி நமக்கு ஆலயமாய் இருக்கின்றார். இயேசுவின் பிரசன்னமும் பரிசுத்த ஆவியின் நிறைவும் தேவ அன்பை அவரிடம் ஊற்றுகின்றது.

கடவுள் அன்பாய் இருக்கின்றார். எனவே இறைவனின் பிரசன்னத்தை முழுமையாகப் பெற்ற மரியாள் மனித நேயம் நிறைந்தவளாய் தியாக அன்பை சுமந்தவளாய் நம்மைத் தேடி நன்மை செய்பவளாய் விளங்குகிறார்.

மரியன்னையை அறியும் ஞானத்திற்காக நாம் எங்கும் தேடியலைய வேண்டாம். இருக்கின்ற இடத்திலேயே நேரம் ஒதுக்கி சிந்திக்க திருச்சபை இந்த மே மாதத்தை ஒதுக்கி தியானிக்கப் பணிக்கின்றது. இந்த மேன்மைமிகு மே மாதத்தில் மரியாளின் ஆசீரை, அருளை, அடைக்கலத்தை ஆர்வமுடன் தேடுவோம்.

லோரன்ஸ் செல்வநாயகம்






## நற்றுணை நீ தான்

கருணை மழையே! கனிவின் உருவே!
அரும்பும் மலரின் அழகே! – திருவே !
உருகி அழைத்தேன்உயிராய் உனையே
வருத்தம் விலக்கிட வா .
ஞான வடிவே நலமருள் ராணியே !
வான ஒளியே! வருவாயே ! – மோன
தவமே! தெளிவினைத் தந்து மனத்தின்
கவலை துடைப்பாய் கனிந்து .
ஊனமுற்ற நெஞ்சத்திற்(கு) ஊன்றுகோல் நீதானே !
தேனமுத பாக்களால் சேவிப்பேன் – வானரசி!
தோளி லெனைச்சுமப்பாய் தூயவளே! மாதாவுன்
தாளினைப் பற்றினேன் தாங்கு.
மெழுகுவர்த்தி ஏற்றிவைத்து மெய்விதிர்க்க நின்று
தொழுதிடுவேன் உன்பாதம் தொட்டு! – முழுமனதாய்
நீயே கதியென நெஞ்சுருகி வேண்டிடுவேன்
தாயேயென் நற்றுணைநீ தான்

சியாமளா ராஜசேகர்...

# தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர்

உலக தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித சூசையப்பரை கத்தோலிக்கத் திருச்சபை நினைவு கூர்ந்து திருவிழா கொண்டாடி சிறப்பிக்கின்றது.

ஏழையாக பிறந்தாலும் ஏற்றமிகு வாழ்வு வாழ்ந்தவர், துன்பத்தில் துவண்டாலும் தூய்மையான வாழ்வு வாழ்ந்தவர், கஷ்டங்கள் மத்தியிலும் கண்ணிய வாழ்வு வாழ்ந்தவர், ஊர் ஓரம் வாழ்ந்தாலும் உழைத்து உயர்ந்தவர், அவரே நாம் மே தினமான தொழிலாளர் தினத்தில் சிறப்பிக்கும் தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர்.

நம் தாய்த் திருச்சபை உழைப்பால் சமுதாயத்தில் கீழ்நிலையில் இருந்த தொழிலை உலகிற்கு உயர்த்திக் காட்டிய புனித சூசையப்பரை தொழிலாளர்களின்

ஒருவர் தகுதி அறிவு உடல் வலிமைக்கு ஏற்ப உழைக்கும் கரங்களை போற்றும் நாள் தொழிலாளர் தினம். இறைவனின் படைப்புத் தொழிலின் பங்காளிகளான தொழிலாளர்களை கரங்குவித்து வணங்கி வாழ்த்திடும் நன்னாள் அது.

உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது என்ற புனித பவுலின் வார்த்தையை மையமாக கொண்டு, ஆரம்ப கால திருச்சபை உழைப்பிற்கு மேன்மை கொடுத்தது.

மனிதன் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி பாடுபட்டு உழைத்திட வேண்டும் என்பது கடவுள் வகுத்த நியதி.

இதற்கு திருக்குடும்பமும் விதிவிலக்கல்ல. தச்சுத் தொழிலில் தன் திறமையைக் காட்டி தன் குடும்பத்தின் தரத்தினை உயர்த்தினார் தச்சனான சூசையப்பர்.

நாம் செய்யும் எந்த தொழிலாக இருந்தாலும் அதை இழிவாக எண்ணாமல், நம் முழு ஈடுபாடு திறமை கடின உழைப்பினை நம் தொழிலினில் காட்டுவோம். பிறரின் தொழிலினையும் அவர்களின் கடின உழைப்பினையும் பாராட்டுவோம்.

இன்று சிறப்பாக சமுதாயத்தின் அடிமட்டத்தில், நமக்காக எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் உழைப்போரை நன்றியோடு நினைவு கூறுவோம்.

எவ்வாறு புனித சூசையப்பர் தன் உழைப்பால் அன்னை மரியாள் இயேசுவை காப்பாற்றினாரோ அதே போன்று நமது உழைப்பால் நம்மை நம்பி இருப்போரைத் தாங்குவோம்.

புனித சூசையப்பர் போன்று உழைப்பில் உண்மை நேர்மை கொண்டு உழைத்து செய்யும் தொழிலில் நிறைவு காண செபிப்போம்.

நாம் செய்கின்ற ஒவ்வொரு தொழிலையும் இறைவன் கரத்தில் ஒப்புவிப்போம்.இறைகரம் நம்மை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும்.



அருட் சகோதரி பிரின்ஸி...

# 43 வது குருத்துவ ஆண்டை நினைவு கூரும் ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை கடந்த ஞாயிற்றுக்கிழமை 30 ஆம் திகதி தமது குருத்துவ வாழ்வின் 43 வது நிறைவை நினைவு கூர்ந்தார்.

ஆண்டகையை கிறிஸ்தவ மஞ்சரி இதய பூர்வமாக வாழ்த்துகிறது. இறை ஆசீருடன் அவர் சிறந்த உடல் நலத்துடன் தனது ஆயர்த்துவ மேய்ப்புப் பணியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவும் மென்மேலும் விசுவாசத்தில் மக்களை வழிநடத்தவும் இறையருள் வேண்டி கிறிஸ்தவ மஞ்சரி பிராத்திக்கின்றது.



ஜோசப் பொன்னையா ஆண்டகை 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அருட்தந்தையாக திருநிலைப்படுத்தப் பட்டார். அதனையடுத்து அவர் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயம், வாகரை, வீச்சுக்கல் முனை ஆயித்தியமலை, தாண்டவன்வெளி உட்பட பல பிரதேசங்களில் பங்குத் தந்தையாக பணியாற்றியதுடன் கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

2008 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, திருகோணமலை மறை மாவட்டத்தின் துணை ஆயராக நியமிக் கப்பட்டு அதனையடுத்து 2012 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராக அவர் திருநிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரக்கத்திற்கு எதிரான பேராயுதங்களாக இன்றைய உலகில் இரண்டு விதமான சக்திகள்

இரக்கத்தின் மறுபெயர்தான் இறைவன் என்பதை எல்லா மதங்களுமே நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கின்றன. இன்றைய உலகில் இரக்கம் என்றால் என்ன, அது எவ்வளவு விலை என்று கேட்கக் கூடிய அளவிற்கு மனித வாழ்வு மாறிவிட்டது என்பது கவலை தரும் விடயமாகும்.

பழிக்குப் பழி, வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதம், பெண்ணடிமைத்தனம், பாலியல் வன்கொடுமைகள் ஆகியவை இரக்கத்திற்கு எதிரான பேராயுதங்களாக இன்று உலகை அச்சுறுத்தி வருகின்றன. பொதுவாக, ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் இரண்டுவிதமான சக்திகள் ஆட்டிப்படைகின்றன. முதலாவது, ‘வேறுபடுத்தும் சக்தி’ (Dividing force) இரண்டாவது, ‘ஒன்றுபடுத்தும் சக்தி’ (Unifying force).

முதலாவதாக, வேறுபடுத்தும் சக்தியைக் கொண்டவர்கள் தன்னலம், பேராசை, கர்வம், செருக்கு, போட்டி, பொறாமை, பகைமை, கட்சி மனப்பான்மை, பிரிவினை பிளவு, அநீதி, நேர்மையற்ற மனம் போன்ற அலகைக்குரிய தீய குணங்களைக் கொண்டிருப்பர். இப்படிப்பட்டவர்கள் தாங்களும் முன்னேற மாட்டார்கள், இந்தச் சமுதாயத்தையும் முன்னேற்றம் காணவிடமாட்டார்கள். இவர்களால் யாருக்கும் எந்த பயனுமில்லை.



இவர்களிடத்தில் எவ்விதமான இரக்கச் செயல்களும் இருக்காது. இரண்டாவதாக, ஒன்றுபடுத்தும் சக்தியைக் கொண்டவர்கள் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, நேர்மை, உண்மை, நீதி, இரக்கம், பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் போன்ற தூய ஆவிக்குரிய விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட நல்லுள்ளம் கொண்டவர்களால் மட்டுமே ஒட்டுமொத்த சமுதாயமும் முன்னேற்றம் காணும் என்பது தெளிவு.

பாவத்தின் பிடியிலிருந்த இவ்வுலகை மீட்கத் திருவுளம் கொண்டதே இறைவனிடம் துலங்கிய இரக்கச் செயலால்தான் என்பது திண்ணம். ஆதிப்பெற்றோரின் பாவச் செயலால் கடவுள் தனது இரக்கத்தை நிறுத்துக்கொள்ளவோ அல்லது குறைத்துக்கொள்ளவோ இல்லை. மாறாக, அன்னை மரியா வழியாக அவரின் இரக்கச் செயல் மானுடத்தை மீட்கும் என்ற வாக்குறுதி இவ்வுலகிற்குக் கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம் (தொநூ 3:15; எசா 7:14).

அருட்பணி சூசைமாணிக்கம்...

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 19ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 11

## குறள் தரும் சிந்தனை



நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்

இனிமையாகத் தெரியும் நிழலும் நீரும்கூடக் கேடு விளைவிக்கக் கூடியவையாக இருந்தால் அவை தீயவைகளாகவே கருதப்படும். அது போலவேதான் உற்றார் உறவினராக உள்ளவர்களின் உட்பகையும் ஆகும்.

## சிரேஷ்ட அரசியல்வாதி ஏ.எச்.எம். பௌசி நாட்டின் நலனுக்காக மேற்கொண்ட முடிவு

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நிதி ரீதியிலான உதவி ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த மார்ச்சில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அந்த உடன்படிக்கையின் ஊடாக அடுத்த நாலாண்டுகளில் இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாகக் கிடைக்க இருக்கிறது. இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 333 மில்லியன் அமெரிக்க டொலர் கடந்த மாதம் பிற்பகுதியில் கிடைக்கப் பெற்றது.

'சர்வதேச நாணய நிதியத்துடனான இந்த உடன்படிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் விவாதம் நடத்தப்பட வேண்டும்' என்று எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைய இந்த உடன்படிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோடு மூன்று நாட்கள் விவாதமும் கடந்த வாரம் நடத்தப்பட்டது. இவ்விவாதத்தின் நிறைவில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் உடன்படிக்கைக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாக்கெடுப்பைத் தவிர்த்துக் கொண்ட போதிலும், அக்கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். பௌஸி வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களித்தார். அதனால் பாராளுமன்ற உறுப்பினர் பௌஸிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

இச்சமயம் தேசியப் பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்துள்ள பௌஸி எம்.பி, 'இந்தச் சந்தர்ப்பத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியக் கடனைத் தவிர வேறு மாற்றுவழி இல்லை. அதனை ஐக்கிய மக்கள் சக்தியினரும் அறிவர். அதனால் அவர்கள் இவ்வாக்களிப்பில் கலந்து கொள்ளாது அரசுக்கு ஆதரவு நல்கினர். நான் அவ்வாறன்றி நேரடியாக ஆதரவளித்தேன். அதற்காக என் மீது எவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும்?' என்று கேள்வி எழுப்பியுள்ளதோடு, 'தற்போதைய சூழலில் நாட்டுக்காக எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மையுமாகும். கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அனுபவித்த துன்பங்களும் அசௌகரியங்களும் கொஞ்சநஞ்சமல்ல. அவற்றின் தாக்கங்களும் அழுத்தங்களும் இன்னும் முற்றாக நீங்கியதாக இல்லை. ஆன போதிலும் அவ்வாறான அசௌகரியங்களும் நெருக்கடிகளும் மீண்டும் இம்மண்ணியில் ஏற்பட்டு விடக்கூடாது என்பது தான் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாக உள்ளது. மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஓரணியில் செயற்படுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அது இன்றியமையாததாகும்.

அந்த வகையில்தான் பௌஸி எம்.பியும் ஓரணியில் செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். 1994 முதல் பல அமைச்சு பதவிகளை வகித்துள்ள இவர், 'தேசிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமில்லாமல் ஒன்றுபட்டு செயற்பட்டால் நாட்டை விரைவாகக் கட்டியெழுப்ப முடியும்' என்றும் கூறியுள்ளார்.

அதேநேரம் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப சகலரும் முன்வர வேண்டும்' என்று ஏற்கனவே அழைப்பு விடுத்திருக்கிறார்.

நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதியின் அழைப்பை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் உள்ளது. இது அற்ப அரசியல் இலாபம் தேடும் நேரகாலம் அல்ல. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாடு தற்போது மீண்டும் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 8 மாதங்களில் முன்னெடுத்த பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின் பிரதிபலனாகவே இந்த அடைவை நாடு பெற்றுக்கொண்டுள்ளது. அதனால் நாட்டில் விரைவான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு சுபிட்சமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தற்போதைய வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பாலான ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை.

ஆகவே முன்னாள் அமைச்சரும் நீண்ட அரசியல் அனுபவங்களைக் கொண்டுள்ளவருமான பாராளுமன்ற உறுப்பினர் பௌஸி குறிப்பிட்டிருப்பது போன்று நாட்டுக்காக எல்லோரும் ஓரணியில் இருக்க வேண்டிய நேரகாலம் இது. நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான பற்று கொண்டிருப்பவர்களின் பொறுப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் தீர்மானங்களை எடுப்பதற்கான உறுதியான முதுகெலும்பில்லை



## ஏ. எச். எம். பௌசி எம்.பி பேட்டி

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்பாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் வாக்களிக்காமல் இருப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த முடிவுக்கு எதிராக வாக்களித்த ஏ. எச். எம். பௌசி எம்.பி தொடர்பாக தற்போது சமூகத்தில் மற்றும் அரசியல் களத்தில் பெரிதும் பேசப்பட்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி பௌஸி எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது. அது குறித்தும் ஏனைய அரசியல் மற்றும் தற்போதைய நிகழ்வுகள் குறித்தும் மூத்த அரசியல்வாதியான ஏ. எச். எம். பௌஸி எமக்குப் பேட்டியளித்தார்.

**கேள்வி:** *நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய மக்கள் சக்தி IMF முன்மொழிவுகள் தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வாக்களிப்பதை தவிர்த்திருந்தது. ஆனால் நீங்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தீர்கள். அதற்குக் காரணம் என்ன?*

**பதில்:** ஆதரவாக வாக்களிப்பதும், வாக்களிக்காமல் சபையை விட்டு வெளியேறுவதும் இரண்டல்ல ஒன்றே. தேவையேற்படின் அவர்கள் சபையில் இருந்தே வாக்களித்திருக்கலாம். கட்சி முதுகெலும்பில்லாத முடிவையே எடுத்தது. அவர்கள் சபையில் இருந்து வெளியேறியதன் மூலம் அவர்களும் அதற்கு ஆதரவானவர்கள் என்பதை உறுதி செய்துள்ளார்கள். ஆனால் அதனை உலகத்திற்கு காட்ட முடியாது. அதனால் வாக்களிப்பை தவிர்க்க முடிவு செய்தார்கள்.

அவ்வேளையில் நான் ஆதரவாக வாக்களிக்க முடிவெடுத்தேன். ஐ.ம.ச இந்த முன்மொழிவை மறைமுகமாக ஆதரித்த வேளையில் நான் நேரடியாக அதற்கு ஒத்துழைப்பை வழங்கினேன். கட்சி என்றால் முதுகெலும்பில்லாத முடிவுகளை எடுக்கக் கூடாது. அரசியல் என்பது நடுநிலையில் இருப்பதல்ல. நேரடியாக முடிவெடுக்க வேண்டும். கட்சிகள் முடிவை எடுப்பது அவ்வாறுதான். ஐ.ம.ச ஊடக சந்திப்புகளின் போது தாம் எதிர்ப்பதாக கூறுகிறார்கள். ஆனால் பாராளுமன்ற சபையில் இருந்து தப்பி ஓடுகிறார்கள்.

அன்று கட்சி நேரடியாக இந்த முன்மொழிவுக்கு ஆதரவு அளிப்பதில்லை என நேரடியாக முடிவெடுத்திருந்தால் நானும் கட்சியுடன் இணைந்து எதிர்த்து வாக்களித்திருந்திருப்பேன். கட்சி கூறியிருந்தால் ஆதரவாகவும் வாக்களித்திருப்பேன் கட்சிகளில் முடிவை எடுப்பது அவ்வாறுதான். ஆனால் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ என்ற இரண்டு முடிவில் ஒன்றை எடுக்காமல் மறைமுகமாக ஆதரவளித்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்யும்போது நான் சரியான விதத்தில் ஆதரவு வழங்கினேன். அதில் ஏதும் தவறு இருப்பதாக நான் எண்ணவில்லை.

ஐ.ம.ச இற்கு அன்றிலிருந்தே இந்த நோயுள்ளது. சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்பதில்லை.

> 'அவர்கள் மறைந்திருந்து ஆதரவளித்தனர். நான் பகிரங்கமாக வாக்களித்தேன்'

தடுமாற்றமான முடிவுகளை எடுக்கிறார்கள். எமது அரசியல் முறை அதுவல்ல. நாம் எப்பொழுதும் நேரடியாக முடிவுகளை எடுக்கின்றோம். கட்சி வளைந்தாலும் நாம் வளைவதில்லை. IMF முன்மொழிவுக்கு ஆதரவு, ஆனால் அதனை வெளிப்படையாகக் கூறுவதில்லை. அதனால்தான் வாக்களிக்காமல் அமைதியாக இருப்போம் என அவர்கள் முடிவு செய்தார்கள். திசைகாட்டிக்கு, டலஸுக்கு முடியும் என்றால் எம்மால் ஏன் நேரடியான முடிவெடுக்க முடியாமல் போனது?

கிராமத்தில் கூற்றொன்று உண்டு. டொண் என்றால் டொண் சீமன் என்றால் சீமன் என்று. ஆனால் எமது கட்சிக்கு டொண்ணும் வேண்டும் சீமனும் வேண்டும். நான் டொண் வேண்டுமென்று நேரான முடிவை எடுத்தேன். அன்று கட்சி நேரடியாக முடிவெடுத்து இருந்தால் நானும் கட்சியின் முடிவுடன் இருந்திருப்பேன். எனக்கு சபையை விட்டு வெளியேறுவது என்ற இரட்டைத் தீர்மானம் குறித்து பெரும் அதிருப்தி ஏற்பட்டது. அதனால் நான் ஐக்கிய மக்கள் சக்தியின் தனியான உறுப்பினராக சபையிலிருந்து வாக்களித்தேன்.

**கேள்வி:** *ஆனால் நீங்கள் எடுத்த முடிவு குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** அவர்கள் முடிவொன்று எடுக்காமல் மறைந்து மறைந்து உதவி செய்தார்கள். நான் பகிரங்கமாக சென்று நேரடியாக வாக்களித்தேன். அதிலுள்ள தவறு என்ன என்று எனக்குத் தெரியவில்லை. இது பற்றி அதிக அளவு விவாதிக்கின்றார்கள். நான் ஒரு மக்கள் பிரதிநிதியாக ஜனநாயக ரீதியில் முடிவெடுத்தேன். கட்சி இரட்டை முடிவை எடுத்துள்ளது. அதனால் யார் சரி, யார் தவறு என்று மக்களுக்குத் தெரியும். அரசு தற்போது இந்தக் கடனை பெற்றுள்ளது. நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்றாலும் இல்லாவிட்டாலும் நடைமுறைப்படுத்தலாம்.

தற்போது IMF கடனைத் தவிர வேறு வழி இல்லை என்பது ஐ.ம.ச இற்கு தெரியும். ஆனால் அதை பகிரங்கமாக சொல்லும் அளவிற்கு அவர்கள் எளிமையானவர்கள் அல்ல. கட்சியிலுள்ள, பொருளாதாரம் பற்றி அறிந்தவர்கள் அனைவரும் இந்தக் கொள்கையையே கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் இந்த முன்மொழிவுக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை ஆனால் ஒரு கட்சியாக பகிரங்கமாக தெரிவித்தால் அது அவர்களுக்கு அரசியல் ரீதியாக பாதிப்பான விடயமாகும். அதனால்தான் அதனைத் தவிர்த்தார்கள். ஆனால் எனக்கு முதுகெலும்பு உண்டு.தற்போதைய சந்தர்ப்பத்தில் இந்த முன்மொழிவு நல்லது என ஏற்றுக்கொண்டேன். அதனால்தான் நான் அதற்கு ஆதரவாக வாக்களித்தேன்.

**கேள்வி:** *ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பௌஸி வெளியேற்றப்பட்டதுதான் இன்று அரசியல் உலகில் பேசுபொருளாக மாறியுள்ளது. அதற்கு முகம் கொடுக்க நீங்கள் தயாரா?*

**பதில்:** எனக்கு எதிராக ஏன் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கின்றார்கள் என்பதுதான் பிரச்சினை. கட்சி மறைமுகமாக ஆதரித்தது நான் நேரடியாக வாக்களித்தேன். எனவே, அவர்கள் என் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாது. நாங்கள் எதிர்க்கிறோம் என்று கட்சி சொல்லி, நான் ஆதரவாக வாக்களித்து இருந்தால் அது ஒழுக்கத்தை மீறிய செயலாகும். கட்சியின் கருத்தை மதிக்கவில்லை என்பதாகும். ஆனால் அன்று அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. கட்சி அல்லது கட்சியின் கொள்கையை காட்டிக் கொடுக்காத என்னை நியாயமான ஒழுக்காற்று விசாரணையில் குற்றவாளியாக்க முடியாது.

**கேள்வி:** *அவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கையில் நீங்கள் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் நீங்கள் என்ன முடிவு எடுப்பீர்கள்?*

**பதில்:** அவர்கள் மறைந்திருந்து உதவி செய்தார்கள், நான் பகிரங்கமாக உதவி செய்தேன். அது ஒழுக்கமீறல் என எப்படி கூறுவது? மற்ற விடயம், மக்கள் பிரதிநிதிகளாக எங்களுக்கு சுயாதீனமாக சிந்தித்து முடிவுகளை எடுக்கும் ஜனநாயக உரிமை உண்டு. இவ்வேளையில் எடுக்கக்கூடிய சிறந்த நடவடிக்கைதான் ஐ. எம். எப் கடனை பெற்றுக் கொள்வது என நான் எண்ணுகிறேன். அவ்வாறு இல்லாவிட்டால் நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினையை நோக்கி பயணிக்கும். அதனை மீட்டெடுக்க முடியாது. அதனால் சிறிய குறைகளை கருத்தில் கொள்ளாது முக்கிய விடயத்துக்காக வேலை செய்வது நல்லது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அதனை புறக்கணித்துச் சென்றவர்கள்தான் இன்று என் மீது ஒழுக்க விசாரணையை மேற்கொள்வதாக உலகிற்கு கூறுகிறார்கள். ஒழுங்கை மீறாத நான் எந்த ஒரு நியாயமான விசாரணைக்கும் முகம்கொடுக்க தயார்.

**கேள்வி:** *ஆனால் நீங்கள் விரைவில் அமைச்சர் பதவி ஒன்றை பெறுவதற்கு தயாராகவுள்ளதால் கட்சியின் கொள்கைக்கு மாறாக செயல்படுவதாக சிலர் கூறுகின்றார்களே?*

**பதில்:** எனக்கு அமைச்சுப் பதவி புதிய விடயமல்ல.

> 'ஸ்தம்பித நிலையிலிருந்த நாட்டை வழமை நிலைமைக்குக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க'

1994 ஆம் ஆண்டிலிருந்து பல அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளேன். எனது அமைச்சுப் பதவியின் வெற்றி குறித்து இன்றும் மக்கள் பேசுகிறார்கள். ரயில் பயணிகள் இன்றும் என்னைப் பற்றி கதைக்கிறார்கள். எனது சேவையை பாராட்டுகிறார்கள். அதனால் அமைச்சுப் பதவி எனக்குப் பெரிய விடயமல்ல. 52 நாள் அரசாங்க காலத்திலும் நான் ஜனநாயகத்தின் பக்கமே நின்றேன். அன்றும் நான் அமைச்சுப் பதவியை பெற்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. எனக்கு அமைச்சுப் பதவியை விட நாடே முக்கியம். நாட்டை ஆபத்திலிருந்து மீட்க முடியும் என்றால் அதற்காக வேலை செய்வேன். எனக்கு தற்போது நாட்டை மீட்பதே அவசியமாக உள்ளதே தவிர அமைச்சர் பதவியல்ல.

எம்மால் இன்னும் 30, 40 ஆண்டுகள் வாழ முடியாது. ஆனால் எமது இளைஞர்களுக்கு நீண்ட எதிர்காலம் உண்டு. அதனால் நாட்டை ஓரளவுக்காவது நிலையானதாக மாற்றவேண்டும். அதற்கான நடவடிக்கை தேவை என்னும் என்ற கடப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். அமைச்சு, உறுப்பினர் என்ற இலக்கு எனக்கு இல்லை.

**கேள்வி:** *ஐ. எம். எப் தொடர்பாக உங்களது கருத்து என்ன?*

**பதில்:** நாடு பெரும் பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. இந்தப் படுகுழியிலிருந்து வெளிவருவது கடினமானதோ முடியாத காரியமோ அல்ல. அதனால் எமக்கு எங்கிருந்தாவது உதவி தேவை . ஆனால் இன்றைய நிலைமையில் எவரும் எமக்கு உதவி வழங்க முன்வரவில்லை. அன்று எரிபொருள் இல்லை, மண்ணெண்ணெய் இல்லை, டீசல் பெட்ரோல் இல்லை நாடே ஒரு இடத்தில் ஸ்தம்பித்து இருந்ததை நான் கண்டேன். நாடு அராஜகமாக மாறி இருந்தது. மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினார்கள். ஜனாதிபதி கோட்டாபய செல்ல வேண்டும் என கூறினார்கள். நாடு வங்குரோத்து நாடாக பெயர் எடுத்திருந்தது. அந்நிலைமையில் தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்றார். அவர் இந்நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பல வழிமுறைகளை உருவாக்கினார்.

அவை ஓரளவுக்கு நாட்டை இயல்புநிலைக்கு கொண்டு வந்துள்ளன. அதன் தொடர்ச்சியே கடன் தவணையை பெற்றுக் கொள்ளல். இதன் மூலம் எம்மால் முற்றிலும் மீள முடியாது. ஆனால் எமக்கு புதிய பாதை திறக்கப்படும். புதிய கடன் போன்று புதிய முதலீடுகளையும் நாட்டிற்கு கொண்டுவர முடியும். நாம் வங்குரோத்து நாடு என்ற இழிவு நிலைமை இந்த கடன் தவணைகளால் நீங்கும். தற்போது எல்லாம் சரியாகிவிட்டது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதன் மூலம் நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வர முடியும். இந்த கடன் முன்மொழிவு எனக்குப் பிடித்திருக்கிறது. இங்கே உள்ள குறைகளை சரி செய்யலாம். ஆற்றில் அடித்துக் கொண்டு செல்லப்படும் போது முதலாவது மரக்கிளையை பற்றிக்கொள்ள வேண்டும் என்று ஒரு கூற்று உண்டு. அதனால் அன்று நாடு இருந்த இடத்தை விட இலகுவான இடத்திற்கு நாட்டை கொண்டு செல்ல முடிந்துள்ளது. கட்சி பேதமின்றி நாம் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**கேள்வி:** *நீங்கள் அவ்வாறு கூறினாலும் இந்த கடன் திட்டத்தின் மூலம் பாதிப்பான விடயங்கள் உள்ளதாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியும் அவற்றை சுட்டிக்காட்டுகின்றது அல்லவா?*

**பதில்:** ஆம், அவ்வாறான விடயங்கள் குறித்து கலந்துரையாடி தீர்வினைப் பெற வேண்டும். அதனால்தான் இவ்வாறான வேளையில் ஒருமித்த கருத்து தேவை. அனைவரும் இணைந்து இந்தப் பிரச்சனையை கலந்துரையாடி தீர்வுகளை எட்ட வேண்டும்.

**கேள்வி:** *ஜனாதிபதி தேசிய உடன்பாடு தொடர்பாக தொடர்ந்தும் பேசி வருகிறார். இவ்வாறான உடன்பாடு குறித்த உங்கள் கருத்தை மூத்த அரசியல்வாதி என்ற வகையில் விளக்க முடியுமா?*

**பதில்:** கண்டிப்பாக தேசிய உடன்பாட்டிற்கு செல்வது நல்லது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வருடம் மற்றும் சில மாதங்கள் மட்டுமே உள்ளன. எனவே அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் இணைந்து இந்த வரையறுக்கப்பட்ட காலத்தில் செயல்பட்டால் நாட்டை விரைவாகக் கட்டியெழுப்ப முடியும். இந்த குறுகிய காலத்தில் ஒன்றிணைந்து செயல்பட முடியும். அதன்பின்னர் தத்தமது அரசியலை அடுத்த தேர்தலில் முன்னெடுக்க முடியும். இவ்வாறான விடயம் எமது நாட்டிற்கு புதியது என்றாலும் ஒருமித்து வேலை செய்து முன்னேற்றம் அடைந்த நாடுகள் உள்ளன. அந்நாடுகளின் தலைவர்கள் முதலில் நாட்டைப் பற்றி சிந்தித்தார்கள். அவ்வாறு எம்மாலும் சிந்திக்க முடியும் என்றால் பெரும் வளர்ச்சியை பெற முடியும். அதனால் ஜனாதிபதியின் யோசனை நல்லது. அனைவரும் இங்கு நேர்மையாக பணியாற்ற வேண்டும் . பதவி சலுகைகள் அல்ல நாட்டையே முதன்மைப்படுத்த வேண்டும். இன்று எப்படியாவது அதிகாரத்தை பெற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. ஆட்சியைப் பாதுகாக்க அரசு முயல்கிறது.

**கேள்வி:** *50 கால வருட அரசியல் வரலாறு உடைய உங்களின் எதிர்கால அரசியல் இலக்கு என்ன?*

**பதில்:** கொழும்பு மாநகர சபை மூலம் வந்த நான் அமைச்சராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளேன். நான் கட்சி பேதம், இன பேதம் கருதவில்லை. எனக்கு அதிகளவு விருப்பு வாக்குகள் ஹோமாகம, கடுவெல, அவிசாவளை போன்ற இடங்களிலேயே கிடைத்தன. சிங்கள மக்களோடு இலங்கையர் என்ற ரீதியிலேயே நான் பணியாற்றினேன். தற்போது எனது எதிர்பார்ப்பு அனைவரும் இணைந்து செயல்படக்கூடிய ஒரு நாட்டை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குவதாகும். கட்சிகள் காரணமாகத்தான் சமூகம் பிரிந்தது. தற்போது அனைவரும் இணைந்து நாட்டை மீட்பதே செய்ய வேண்டிய ஒன்றாகும். பதவிகள், சலுகைகள் இல்லாமல் நாட்டுக்காக பணியாற்ற முடியும் என்றால் நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையும். அரசியல் என்பது இன்று அநேகமானோருக்கு கசப்பான தலைப்பாகும். அது அரசியலின் பிழையல்ல. அரசியலை செய்பவர்களின் பிழை. மக்களுக்காக வேலை செய்து மக்களுடன் இணைந்த அரசியலில் ஈடுபடுவதே எனது விருப்பமாகும். நான் அமைச்சராக அவ்வாறு மக்களுடன் நெருங்கிய அரசியலிலேயே ஈடுபட்டேன். நாம் குறுகிய கருத்துகளை கைவிட்டு நாட்டுக்காக இணைந்து பணியாற்றுவோம் என அரசியலில் ஈடுபடுபவர்கள் அனைவருக்கும் கூறுகின்றேன்.

உதித்த குணவர்தன
(தமிழில்: வீ. ஆர். வயலட்)

## புத்தளம் மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்

### பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமுக்கு மக்கள் பாராட்டு



புத்தளம் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக தடைப்பட்டிருந்த பாதை அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடியதை கடந்த மாதம் நடைபெற்ற புத்தளம் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் விவரித்தார்.

அந்த அடிப்படையில் ஆலங்குடா பாதை அபிவிருத்தித் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முதலைப்பாளி, கரைத்தீவு மற்றும் முள்ளிபுரம் ஆகிய பாதை அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில்

# யோசனைகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்ள நீதியமைச்சு முடிவு

### பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தற்காலிகமாக தாமதிக்கவும் தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் யோசனைகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கு நீதியமைச்சு தீர்மானித்துள்ளதாக நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்பினரிடமிருந்தும் மேற்படி யோசனைகள் மற்றும் கருத்துககளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பாக அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட எந்த துறை சார்ந்த நபர்களாகவிருந்தாலும் அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்காக எதிர்வரும் மே 30 ஆம் திகதி வரை காலஅவகாசம் வழங்கப்படுவதாகவும் யோசனைகள் மற்றும் கருத்துக்களை முன்வைக்க விரும்புவோர் அதனை நீதியமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, அந்த யோசனைகள் மற்றும் கருத்துக்களைக் கருத்திற்கொண்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், அதற்கு முன்பதாக பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தினால் மேற்படி சட்டமூலம் அண்மையில் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு சில தரப்பினரின் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சம்பந்தப்பட்ட சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹொரவபொத்தான – வவுனியா வீதியில் கார் மோதி விபத்து; இருவர் உயிரிழப்பு



கெப்பித்திகொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஹொரவ பொத்தான நோக்கி திரும்பிக்கொண்டிருந்த கார் ஒன்று, ஹொரவபொத்தானை – வவுனியா வீதியில் கிவுளேகட பகுதியில் நேற்று முன்தினம் (30) இரவு வேகக்கட்டுப்பாட்டை மீறி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காரில் பயணித்த மூவரில் ஒருவர் ஹொரவபொத்தான வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றைய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் ஹொரவபொத்தான, மரதன்கடவல பகுதியை சேர்ந்த முனசிங்கசே ரோமிந்த மதுபாசன (22 வயது) மற்றும் ஹொரவபொத்தான நிக்கவெவ சந்தியில் வசித்து வரும் ரன்னஹென்னகே சதறு பிரபாஷன (19 வயது) ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை குறித்த விபத்தில் படுகாயமடைந்த 30 வயதுடைய நபர் அநுராதபுர போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவபொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(முஹம்மட் ஹாசில்)

## மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவது தொடர்பில் எவ்வித முடிவுமில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவிக்கு நியமிப்பது தொடர்பில் கட்சிக்கு இதுவரை எந்தவொரு யோசனையும் கிடைக்கவில்லையென பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினரால் அதுதொடர்பில் பல்வேறு உண்மைக்குப் புறம்பான பிரசாரங்கள் முன்வைக்கப்பட்டுவருவதாக குறிப்பிட்டுள்ள அவர், அவ்வாறான எந்த யோசனையையும் கட்சிக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டபின்னர்ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அமைச்சரவை மாற்றம் ஒன்று தொடர்பில் தெரிவிக்கப்பட்டாலும் அது முழுமையாக ஜனாதிபதி சம்பந்தப்பட்ட விடயமாகும். அந்த வகையில் நாம் கட்சியென்ற வகையில் எந்தவொரு தலையீட்டையும் அதற்காக மேற்கொள்ளப்போவதில்லை. அது முழுமையான ஜனாதிபதி விடயமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சியினர் பொய் பிரசாரம்

மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்குவதற்கு கட்சியில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர், இல்லை அவ்வாறு எந்த யோசனையும் கட்சிக்கு கிடைக்கவில்லை. அதுதொடர்பில் வெளியிடப்படும் தகவல்கள் பொய்யானவை.

எதிர்க்கட்சியினருக்கு இக்காலங்களில் செய்வதற்கு வேலை இல்லாததாலும் பேசுவதற்கு வேறு தலைப்பு கிடைக்காததாலும் பொய் தலைப்புகளில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். நாம் பலமான கட்சியென்ற வகையில் எமது பயணத்தை தொடர்கின்றோம். மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்கவேண்டுமானால் ஒவ்வொருவரும் கூறுவது போலன்றி கட்சியாக நாம் மக்களின் பலத்துடன் அதனை மேற்கொள்வோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




டாக்டர். டி. சர் பிட்டி தியாகராய செட்டியின் 172வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, அனைத்திந்திய தேவாங்கர் (தெலுங்கு) நலன்புரிச் சங்கத்தின் அடையார் கிளையினால், சென்னை ரேஸ் கிளப்பில் நடைபெற்ற நிகழ்வில் தென்னிந்தியாவிற்கான இலங்கையின் துணைத் தூதுவர் வெங்கடேஷ்வரன் (27) கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் மூத்த அதிகாரிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கொழும்பில் சீன உதவியில் வீடமைப்பு திட்டங்கள்

சீனாவின் நிதியுதவியின் கீழ் கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோருக்காக புதிய வீடமைப்பு திட்டங்களை நிர்மாணிக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. 450 மில்லியன் டொலர் நிதியுதவியை சீனா இதற்காக வழங்கவுள்ளது. கொழும்பின் 5 இடங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சத்யானந்த தெரிவித்துள்ளார். இந்த திட்டத்தின் கீழ் 1995 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் இந்த வீடமைப்பு திட்டம் நிறைவு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


1990 இன் 40 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) வங்கிகள் மூலம் கடன்களை மீட்கும் 9ஆவது பிரிவின் கீழான விற்பனை

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி - கடுவளை கிளை**

**பொது ஏல விற்பனை**

அடமானம் வைப்பவரான பியகம, சமுர்தி மாவத்தை, இல. 577/1பி இன் தசித்த பபசர மவித கமகே மற்றும் பிணைப்படுத்திக் கொண்டவரான பியகம, சமுர்தி மாவத்தை, இல. 577/1பி இல் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட PV 115720 ஆம் இலக்க பதிவின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றான கமகே நியு என்டர்பிரைசஸ் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் பியகம, சமுர்தி மாவத்தை, இல. 577/1பி இன் மவித கமகே நிஹால் மற்றும் தசித்த பபசர மவித கமகே ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட வசதிகளுக்காக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி ஆதரவாக கொழும்பு பகிரங்க நொத்தாரிசு டபிள்யு.எல். ஜயவீர மூலம் சான்றளிக்கப்பட்ட 2017 டிசம்பர் 14ஆம் திகதிய 5036 ஆம் இலக்க அடமானப் பத்திரம் மற்றும் ஆதரவாக கொழும்பு பகிரங்க நொத்தாரிசு டபிள்யு.எல். ஜயவீர மூலம் சான்றளிக்கப்பட்ட 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 4986ஆம் இலக்க அடமானப் பத்திரம் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு சொத்து கையகப்படுத்தப்பட்டது.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரலவின் அதிகாரி பட்டுவவில் பியகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட 280 பியகம வடக்கு கிராம சேவகர் பிரிவில் பியகம கிராமத்தில் அமைந்துள்ள மரங்கள், கட்டிடங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தையும் சேர்த்து **தெல்கஹலந்த** என்று அழைக்கப்படும் **மில்லகஹவத்த** என்று அழைக்கப்படும் மற்றும் அறியப்படும் காணியின் உரிமம் பெற்ற அளவையாளர் பீ.எம். லீலாரத்ன மூலம் மேற்கொள்ளப்பட்ட **2003.03.04 ஆம் திகதிய 36/2003** ஆம் இலக்க திட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள **லொட் 1A** இன் அனைத்தும் பிரிக்கப்பட்டு மற்றும் ஒதுக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது. **கம்பஹா** காணி பதிவகத்தில் **N 216/23** ஆகிய தொகுதி/ இணைப்புப் பக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் கூறப்பட்ட **36/2003** ஆம் இலக்கத்திற்கு அமைய கூறப்பட்ட **லொட் 1A** மிகச் சரியாக **ஒரு ரூட் மற்றும் இரண்டு புள்ளி எட்டு பேர்சர்ஸ் (A0 – R1 – P3.8)** அளவை கொண்டுள்ளது.

**கட்டிடங்கள், மரங்கள் மற்றும் அங்கு உள்ள அனைத்துடனும் சேர்த்து 01 ரூட் 3.8 பேர்சர்ஸ் (A.0 – R.1 – P.3.8) அளவு காணி.**
**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் அந்த இடத்தில்**
**2023 மே 18 ஆம் திகதி மு.ப. 9.30க்கு பொது ஏல விற்பனை மூலம் நான் விற்கவுள்ளேன்**

**அணுகல் முறை:-** கடுவளையில் இருந்து 'சியம்பலாப்ப சமிக்ஞை விளக்கு சந்தி' வரை சுமார் 3.3 கி.மீ. கம்பஹா வீதியில் தொடர்ந்து பயணித்து, சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வலது பக்கம் திரும்பி சுமார் 600 மீற்றர் தொடர்ந்து பயணித்தால் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தை அடைவதற்கு முன்னர் சுமார் 750 மீற்றரில் வலது பக்கம் வீதிக்கு முன்னால் குறித்த காணியை அடையலாம்.

**தீர்மானத்தின் அறிவித்தலுக்கு:** 2022.11.29 இன் டெய்லி மிரர், லங்காதீப மற்றும் தினக்குரல் பத்திரிகைகள் மற்றும் 2022.12.02 இன் அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டணம் செலுத்தும் முறை: வெற்றிகரமான கொள்வனவாளர் சுத்தியல் இறக்கப்பட்ட பின் பின்வரும் தொகைகளை செலுத்த வேண்டும்.

**1.** கொள்வனவு செய்யப்பட்ட விலையின் பத்து வீதம் (10%). **2.** 1% (ஒரு வீதம்) உள்ளூர் நிர்வாகத்திற்கு செலுத்தக்கூடிய உள்ளூர் விற்பனைவரி. **3.** ஏலதாரரின் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%). **4.** 3000 ரூபா விற்பனை நிபந்தனைக்கான நொத்தாரிசு சான்றளிப்புக் கட்டணம். **5.** எழுதுவினைஞரின் மற்றும் ஏலம் போடுபவரின் சம்பளங்கள் ரூபா 2000. **6.** விற்பனைக்காக ஏற்பட்ட மொத்த விளம்பர செலவு. **7.** விற்பனை திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்தக்கூடிய இலங்கை அரசாங்கம் அல்லது வேறு நிர்வாகத்தின் மூலம் விதிக்கப்பட்ட மற்றும் பொருந்தும்போதான வேறு சட்டரீதியான வரிகளுடன் சேர்த்து கொள்வனவு விலையில் எஞ்சிய 90%.

**மேல் குறிப்பிடப்பட்டவாறு கூறப்பட்ட எஞ்சிய தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட 10% கொள்வனவு விலையை பறிமுதல் செய்யவும் காணியை மீண்டும் விற்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.**

மேலதிக விபரங்களுக்கு 011 - 2538426, 011 - 2571084 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு கடுவளை, அவிசாவெல்ல வீதி, இல. 508/5 என்ற முகவரியில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி, முகாமையாளரை தொடர்புகொள்ள முடியும்.

'முன் அறிவித்தல் இன்றி மேலுள்ள ஏலத்தை நிறுத்தவும்/ ரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உள்ளது.'

**எம்.எச்.டீ. கருணாரத்ன (ஜே.பீ.)**
**உரிமம் பெற்ற ஏலமிடுபவர்,**
**மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.**

**டீ அன்ட் எச் ஒக்ஷன்**
**இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ.**
**தொ.: 011 3068185, 0112572940**



1990 இன் 40 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) வங்கிகள் மூலம் கடன்களை மீட்கும் 9ஆவது பிரிவின் கீழான விற்பனை

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி**
**ஹோமாகம கிளை**
**பொது ஏல விற்பனை**

பிணைப்படுத்திக் கொண்டவரான மாவத்தகம போபிடிய, "**சனசும**" இன் லகமலகே மஞ்சுல பிரியந்தவுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு ஆதரவாக கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ஆர்.ஏ.எம்.வி.ராஜசூரியவினால் சான்றளிக்கப்பட்ட 2018 ஜனவரி 18 ஆம் திகதிய 2414 ஆம் இலக்க அடமானப் பத்திரத்தின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு சொத்து கையகப்படுத்தப்பட்டது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேமாகம கோரலேவின் பல்லே பட்டுவவில் கடுவளை பிரதேச செயலகம் மற்றும் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 477பி - முத்தெட்டுகொட கிராமசேவகர் பிரிவில் தலங்கமவில் அமைந்துள்ள "**கொரககஹவத்த**" என்று அழைக்கப்படும் காணி மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்தும் உரிமம் பெற்ற அளவையாளர் பி.எச்.ஏ. டி சில்வா மூலம் மேற்கொள்ளப்பட்ட 2017 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய **$2988^B$** ஆம் இலக்க திட்டத்தில் விபரிக்கப்பட்ட **லொட் 2** குறிப்பிடப்பட்ட காணியின் (உரிமம் பெற்ற அளவையாளர் டி.ஏ. மெண்டிஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட 1975 ஏப்ரல் 27 ஆம் திகதிய 1783 ஆம் இலக்க திட்டத்தில் விபரிக்கப்பட்ட லொட் $A^1$ இன் மறு அளவையாகும்) அனைத்தும் பிரிக்கப்பட்டு மற்றும் ஒதுக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது. கூறப்பட்ட **$2988^B$** ஆம் இலக்கத் திட்டத்திற்கு அமைய **லொட் 2 முப்பத்து ஒரு பேர்சர்ஸ் (A0 – R0 – P31) அல்லது 0.07040 ஹெக்டயர்** அளவைக் கொண்டது.

**கூறப்பட்ட உரிமம் பெற்ற அளவையாளர் டி.ஏ. மெண்டிஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட 1975 ஏப்ரல் 27ஆம் திகதிய 1783ஆம் இலக்க திட்டத்தில் விபரிக்கப்பட்ட லொட் $A^1$ இன் மறு அளவை மேற்கொள்ளப்பட்டதோடு அது உரிமம் பெற்ற அளவையாளர் டி.ஏ. மெண்டிஸ் மூலம் 1970 நவம்பர் 16 ஆம் திகதிய 1436 ஆம் இலக்க திட்டத்தில் விபரிக்கப்பட்ட லொட் A இன் மறு அளவை என்பதோடு மேலும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது;**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேமாகம கோரலேவின் பல்லே பட்டுவவில் கடுவளை பிரதேச செயலகம் மற்றும் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 477பி முத்தெட்டுகொட கிராமசேவகர் பிரிவில் தலங்கமவில் அமைந்துள்ள **கொரககஹவத்த** என்று அழைக்கப்படும் காணி மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்தும் உரிமம் பெற்ற அளவையாளர் டி.ஏ. மெண்டிஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட 1970 நவம்பர் 16 ஆம் திகதிய 1436 ஆம் இலக்க திட்டத்தில் விபரிக்கப்பட்ட லொட் A குறிப்பிடப்பட்ட காணியின அனைத்தும் பிரிக்கப்பட்டு மற்றும் ஒதுக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதோடு ஹோமாகம காணி பதிவகத்தில் G 605/32 ஆகிய தொகுதி/ இணைப்புப் பக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் கூறப்பட்ட 1436 ஆம் இலக்க திட்டத்திற்கு அமைய கூறப்பட்ட **லொட் A முப்பத்து ஐந்து தசம் ஆறு பூஜ்யம் பேர்சர்ஸ் (A0 – R0 – P35.60)** அளவைக் கொண்டது.

**கூறப்பட்ட $2988^B$ ஆம் இலக்கத் திட்டத்தில் விபரிக்கப்பட்ட லொட் 1 உடன் சேர்த்து உரிமைகள் மற்றும் ஏனைய துணை உரிமைகளைக் கொண்டதாகும்.**

**கட்டிடங்கள், மரங்கள் மற்றும் அங்கு உள்ள அனைத்துடனும் சேர்த்து 31 பேர்சர்ஸ் (0A – 0R –31P) அளவு காணி.**
**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் அந்த இடத்தில் 2023 மே 18 ஆம் திகதி மு.ப. 11.30க்கு பொது ஏல விற்பனை மூலம் நான் விற்கவுள்ளேன்**

7. Bids must be delivered to The Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Vavuniya by Registered Post or Directly put into the Tender Box at or before **10.00 am on 23/05/2023. Name of work and Contract number should be mentioned in the left-hand corner of Envelope. Original and Copy of Bid have to submit in separate Envelopes.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.
8. All Bids shall be accompanied by a Bid Security in the form of Bid Security included in Section - 9. The amount and validity of Bid Security shall be as per the information given in the table below.
9. A pre-bid meeting will be held at Department of Agrarian Development, Vavuniya on **15/05/2023** at 10.00am. Interested bidders may participate in this meeting on their own expenses.
10. Deputy Commissioner, Department of Agrarian Development, Vavuniya shall have the powers to :

    (a) accept any bid, or part of a bid.
    (b) Accept part of more than one bid
    (c) Reject all or any bid
    (d) Direct to re-invite bids.

| Contract No. | Description of Works | Estimate Amount (excluding taxes) (Mn) | Contract Period | Required Grade & Field | Bid Validity Period | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Bid Security Amount (Rs) | Validity Period |
| 281/12/17/94/ 18/02/2023 | Renovation of Kooratiyawewa Down Stream | 2.10 | 105 Days | C9, C8 and C7 Irrigation & Land Drainage | 08.08.2023 | 21,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/03/2023 | Renovation of Weharawen-thawewa Down Stream | 1.50 | 105 Days | C9 and C8 Irrigation & Land Drainage | 08.08.2023 | 15,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/04/2023 | Renovation of Palugaswewa Down Stream | 2.74 | 105 Days | C9, C8 and C7 Irrigation & Land Drainage | 08.08.2023 | 28,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/05/2023 | Renovation of Neriyakulam & Neriyakulam Anicut Down Stream | 1.81 | 105 Days | C9 and C8 Irrigation & Land Drainage | 08.08.2023 | 19,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/06/2023 | Renovation of Periya Nochchikulam Anicut Down Stream | 2.74 | 105 Days | C9, C8 and C7 Irrigation & Land Drainage | 08.08.2023 | 28,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/07/2023 | Renovation of Periya Nochchikulam Down Stream | 2.64 | 105 Days | C9, C8 and C7 Irrigation & Land Drainage | 08.08.2023 | 27,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/08/2023 | Renovation of Kalveerankulam Down Stream | 7.48 | 120 Days | C8, C7 and C6 Irrigation & Land Drainage | 08.08.2023 | 75,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 18/09/2023 | Renovation of Muthaliyarkulam Down Stream | 8.29 | 120 Days | C8, C7 and C6 Irrigation & Land Drainage | 08.08.2023 | 83,000.00 | 05.09.2023 |
| 281/12/17/94/ 05/05-08/2023 | Renovation of Thulavalkulam Down Stream | 1.44 | 105 Days | C9 and C8 Irrigation & Land Drainage | 08.08.2023 | 15,000.00 | 05.09.2023 |

**The Chairman,**
**Department Procurement Committee,**
**Department of Agrarian Development,**
**Vavuniya.**

பாதுகாப்பு அமைச்சு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அரங்க கட்டிடத்திற்கான தரை விரிப்புகளை வழங்குதல், இடுதல் மற்றும் கட்டமைத்தல்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/ 01/2023

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அரங்க கட்டிடத்திற்கான தரை விரிப்புகளை வழங்குதல், இடுதல் மற்றும் கட்டமைப்பதற்காக** தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.05.03** ஆம் திகதியிலிருந்து **2023.05.24** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான **(இலங்கை வங்கி கணக்கு இலக்கம் - 9405831)** காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,500/-** கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் **2023.05.03 முதல் 2023.05.24** ஆம் திகதி வரையான **அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)**

4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

5. **2023.05.25 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர் (ஏற்பாடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.** (தொலைபேசி - **011-2632430** தொலைநகல் **011-2632430**, **directorlogistics@kdu.ac.lk / ocrepair@kdu.ac.lk** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம் **விலைமனுக்கோரல்**)

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலான, இலங்கை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசு
நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம், பொலன்னறுவை மாவட்டம்
### தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்களைக் கோரல்

01. பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளரினால் பொலன்னறுவை வலயத்திற்கான பின்வரும் நிர்மாணங்களின் பொருட்டு தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | நீர்ப்பாசனப் பொறியிய லாளர் பிரிவு | விலைக் கோரல் பிணைத் தொகை (பணமாக) | விலைக் கோரல் பிணைத் தொகை (நிதி நிறுவனம்) | ஆகக் குறைந்த CIDA (ICTAD) தரம் | நிர்மாணக் காலம் (வாரங் கள்) |
|---|---|---|---|---|---|---|
| DI/PLN/PIDP/ NCB/2023/08 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள கவுடுல்ல பிரிவில் தம்சோபுர குளத்தின் மத்திய கால்வாய் 0+070 முதல் 0+850 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 33,000.00 | 45,750.00 | C 9, C 8 மற்றும் C 7 | 15 |
| DI/PLN/PIDP/ NCB 2023/09 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள கவுடுல்ல பிரிவில் தம்சோபுர தெற்கு கால்வாய் கரையில் தற்போதுள்ள கோடிடப்பட்ட கால்வாய் வழியிலிருந்து 1+000 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 89,500.00 | 124,500.00 | C 8, C 7 மற்றும் C 6 | 30 |
| DI/PLN/PIDP/ NCB2023/10 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில் 12.5 மீற்றர் நீளமான பக்கச் சுவர், 24 மீற்றர் நீளமான கால்வாய் லைனிங் நிர்மாணித்தல் 0+006 (முதல் 0+030 வரை) மற்றும் கால்வாயின் கீழ்ப் பகுதியில் D 506/507 திசை திருப்பல் கட்டமைப்பை நிர்மாணித்தல் | எலஹெர | 37,500.00 | 51,750.00 | C 9, C 8 மற்றும் C 7 | 15 |
| DI/PLN/PIDP/ NCB2023/11 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில 0+565 இடத்தில் உள்ள பழைய மதகை தகர்த்து புதிதாக நிர்மாணித்தல் | எலஹெர | 46,500.00 | 64,500.00 | C 8, C 7 மற்றும் C 6 | 30 |
| DI/PLN/PIDP/ NCB2023/12 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில் திசைதிருப்பும் கட்டமைப்பைத் தகர்த்து புதிதாக நிர்மாணித்தல 0+137, 0+172, 0+212 மற்றும் 0+260 இடங்களில் மதகுகளை நிர்மாணித்தல் மற்றும் 0+323 இடத்தில் திசைதிருப்பும் கட்டமைப்பை நிர்மாணித்தல் | எலஹெர | 33,000.00 | 45,500.00 | C 9, C 8 மற்றும் C 7 | 15 |
| DI/PLN/PIDP/ NCB2023/13 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில் 0+323 முதல் 0+573 வரையில் கொங்கிறீட் லைனிங் கட்டமைப்பை அமைத்தல் மற்றும் 0+390 இடத்தில் மதகை நிர்மாணித்தல் மற்றும் 0+417 இடத்தில் 30 மீற்றர் நீளமான நீண்ட தொட்டி பாலத்தை நிர்மாணித்தல் | எலஹெர | 79,500.00 | 110,250.00 | C 8, C 7 மற்றும் C 6 | 30 |
| DI/PLN/PIDP/ NCB2023/14 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில் 0+950 முதல் 1+125 வரையில் லைனிங் கட்டமைப்பை அமைத்தல் மற்றும் 1+018 இடத்தில் 12 மீற்றர் நீளமான தொட்டி பாலத்தை நிர்மாணித்தல் | எலஹெர | 45,500.00 | 63,250.00 | C 8, C 7 மற்றும் C 6 | 30 |
| DI/PLN/PIDP/ NCB2023/15 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில் 1+225 முதல் 1+525 வரை நிலத்துக்கடியில் நிர்மாணிக்கப்படும் கொங்கிறீட் குழாய் வழியை நிர்மாணித்தல் | எலஹெர | 100,250.00 | 139,000.00 | C 7, C 6 மற்றும் C 5 | 30 |
| DI/PLN/PIDP/ NCB2023/16 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழுள்ள எலஹெர பிரிவில் யாய 30 FC1 கால்வாயில் 1+550, 1+600, 1+700, 1+825, 1+850, 1+900, 2+200, 2+250 மற்றும் 2+290 இடங்களில் நீர் பாயும் கட்டமைப்பை நிர்மாணித்தல் | எலஹெர | 37,000.00 | 51,500.00 | C 9, C 8 மற்றும் C 7 | 15 |

02. விலைக்கோரலுக்கான தகைமையைப் பெறுவதற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்புத் துறையில் குறித்த தரத்திற்கான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
03. வெளிக்களப் பரிசோதனை 2023-05-23ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கவுடுல்ல பிரதேச நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகத்தில் ஆரம்பமாகும் என்பதுடன் கேள்வி முன்னோடிக் கூட்டம் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
04. பொலன்னறுவை, புதிய நகரம், நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் (027-2222215), எலஹெர நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் (066-2256602) மற்றும் கவுடுல்ல பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் (தொ.பே. 027-2248434) வாரத்தின் வேலை நாட்களில் 09.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. இதன் பொருட்டு ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023-05-03ஆம் திகதி முதல் 2023-05-29ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத 4000.00 ரூபாவை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
06. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 2023-05-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நீர்ப்பாசனப் பணிப்பாளர், பெறுகைக் குழுவின் தலைவர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், பொலன்னறுவை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள உள்ளிட்டோ சமர்ப்பித்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் அவை உடன் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. அனைத்து கேள்விகளுடனும் மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏற்றுக்கொள்ளக் கூடிய கேள்விப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பொறி. எல்.எம்.டபிள்யூ. ரத்னசிரி,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**பொலன்னறுவை.**

**திகதி: 2023-04-28**
**தொலைபேசி: 027-2222215**

# செலான் வங்கி பீ.எல்.சீ.

(2007-07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q. 9ன் கீழ் பதிவு செய்யப்பட்டது) 1990 ஆம் ஆண்டு 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டு 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08 ம் பிரிவின் கீழ் 2023 ஜனவரி 24 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

**கிளை** : கம்பஹா

**கணக்கு இலக்கம்** : 0110-01661470-001

(2007 ம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஆகஸ்ட் 07ஆம் திகதியிடப்பட்ட 333ம் இலக்க பிணைமுறி, 2014 மே 30ம் திகதியிடப்பட்ட 509ம் இலக்க பிணைமுறி, 2015 ஒக்டோபர் 12ம் திகதியிடப்பட்ட 865ம் இலக்க பிணைமுறி மற்றும் 2018 பெப்ரவரி 14ம் திகதியிடப்பட்ட 1465ம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகு வைத்தவரான" ராகமையைச் சேர்ந்த நிஷாந்த யசஸ் லியனாரச்சி என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணை முறிகளின் மீது பெறப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் வசதிகளுக்காக 2022 ஒக்டோபர் 13ம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக நூற்று முப்பத்தேழு மில்லியன் எண்ணூற்றுப் பதினைந்தாயிரத்து முந்நூற்று தொண்ணூற்றிரண்டு ரூபா பத்தொன்பது சதத் (ரூ.137,815,392.19) தொகையை வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான நூற்று முப்பத்தேழு மில்லியன் எண்ணூற்றுப் பதினைந்தாயிரத்து முந்நூற்று தொண்ணூற்றிரண்டு ரூபா பத்தொன்பது சதத் (ரூ.137,815,392.19) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 ஒக்டோபர் 14ம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை கீழ் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 333, 509, 865 மற்றும் 1465ம் இலக்க பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி. சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

அ). **நிரந்தர மேலதிகப்பற்று** வசதியின் மீது பெறப்பட்ட ஆறு மில்லியன் முந்நூற்று ஐம்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ரூபா எண்பத்தேழு சதத் (ரூ.6,359,969.87) தொகை மற்றும் 2022 ஒக்டோபர் 14ம் திகதி முதல் கொடுப்பனவுகள் முற்றாக செலுத்தப்படும் வரை முப்பத்தாறு வீத (36%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

ஆ). **தவணைக் கடன் III** வசதியின் மீது பெறப்பட்ட முப்பத்தொரு மில்லியன் அறுநூற்று நாற்பத்திரண்டாயிரத்து நூற்று ஐம்பத்தைந்து ரூபா இருபத்தொன்பது சதத் (ரூ.31,642,155.29) தொகை மற்றும் 2022 ஒக்டோபர் 14ம் திகதி முதல் கொடுப்பனவுகள் முற்றாக செலுத்தப்படும் வரை இருபத்தெட்டு மில்லியன் ஏழாயிரத்து ஐந்நூற்று எழுபத்தொரு ரூபா இருபத்தெட்டு சதத் (ரூ.28,007,571.28) தொகை மீது பதினேழு புள்ளி ஐந்து வீத (17.5%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை

இ). **தவணைக் கடன் IV** வசதியின் மீது பெறப்பட்ட எண்பத்து நான்கு மில்லியன் ஐந்நூற்று நாற்பதாயிரத்து தொள்ளாயிரத்து பதின்மூன்று ரூபா எட்டு சதத் (ரூ.84,540,913.08) தொகை மற்றும் 2022 ஒக்டோபர் 14ம் திகதி முதல் கொடுப்பனவுகள் முற்றாக செலுத்தப்படும் வரை எழுபத்தைந்து மில்லியன் இருநூற்று அறுபத்தேழாயிரத்து நூற்றுப் பதினெட்டு ரூபா எண்பத்தெட்டு சதத் (ரூ.75,267,118.88) தொகை மீது பதினேழு புள்ளி ஐந்து வீத (17.5%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

ஈ). **சௌபாக்யா கடன்** வசதியின் மீது பெறப்பட்ட பதினைந்து மில்லியன் இருநூற்று எழுபத்திரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பத்து மூன்று ரூபா தொண்ணூற்றைந்து சதத் (ரூ.15,272,353.95) தொகை மற்றும் 2022 ஒக்டோபர் 14ம் திகதி முதல் கொடுப்பனவுகள் முற்றாக செலுத்தப்படும் வரை பதின்மூன்று மில்லியன் எண்ணூற்று எண்பதாயிரம் ரூபா (ரூ.13,880,000.00) தொகை மீது பதினான்கு புள்ளி ஐந்து வீத (14.5%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

**மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன அட்டவணை:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லையின் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் பட்டுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டுவத்தவில் அமைந்துள்ள, "போகஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஜே.எம்.எப்.எஸ். வீரசிங்ஹ என்பவரால் 2011.01.13ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3192/B எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: ஆர்.ஏ.டி.தர்மதாச என்பவரால் உரிமை கோரப்படும் காணி கிழக்கு: வீதி (பிரதிபா மாவத்தை) தெற்கு: 3192ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1/A மேற்கு: 3192ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1/A ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த லொட் A என பிரித்தொதுக்கப்பட்ட காணியின் பரப்பளவானது பன்னிரண்டு புள்ளி ஆறு ஐந்து பேர்ச் (ஏ.0-றூ.-பே.12.65) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஆகஸ்ட் 07ம் திகதியிடப்பட்ட 333ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன அட்டவணை:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லையின் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் பட்டுவத்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டுவத்தவில் அமைந்துள்ள, "அம்பகஹவத்த மறுபெயர் தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் 2010.05.13ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 16671 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A4 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடகிழக்கு: லொட் A3 தென்கிழக்கு: எஸ்.ஏ.டி. சோமாவதி மற்றும் எஸ்.ஏ.டி. லலிதா என்பவர்களின் காணி தென்மேற்கு: பசல் மாவத்தை வீதி (ஆர்.டி.ஏ.) வடமேற்கு: லொட் A5 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த 16671 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A4 என பிரித்தொதுக்கப்பட்ட காணியின் பரப்பளவானது இருபத்தாறு புள்ளி இரண்டு ஐந்து பேர்ச் (ஏ.0-றூ.0-பே.26.25) ஆகும்.

அத்தோடு, 16671 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A5 (10.25 பே.) (12 அடி அகலமான பாதைக்கான ஒதுக்கீடு) என பாதைக்கான ஒதுக்கீடாக பிரித்தொதுக்கப்பட்ட காணியின் ஊடாகவும் மேலாகவும் உள்ள வழியுரித்துடன் சேர்த்து ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014 மே 30ம் திகதியிடப்பட்ட 509ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட மூன்றாவது ஆதன அட்டவணை:**

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லையின் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 213 பட்டுவத்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டுவத்த கிராமத்தில் அமைந்துள்ள, "தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் 2013.08.23ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A10 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: ஆதர் பெரேரா மாவத்தை (பி.ச. வீதி) கிழக்கு: லொட் A11 தெற்கு: A14 மற்றும் A7 மேற்கு: லொட் A9 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A10 என பிரித்தொதுக்கப்பட்ட காணியின் பரப்பளவானது பதினொரு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.11) ஆகும்.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லையின் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 213 பட்டுவத்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டுவத்த கிராமத்தில் அமைந்துள்ள, "தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் 2013.08.23ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A11 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: ஆதர் பெரேரா மாவத்தை (பி.ச. வீதி) கிழக்கு: லொட் A12 மற்றும் A13 தெற்கு: A14 மேற்கு: லொட் A10 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A11 என பிரித்தொதுக்கப்பட்ட காணியின் பரப்பளவானது பன்னிரண்டு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.12) ஆகும்.

3. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லையின் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 213 பட்டுவத்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டுவத்த கிராமத்தில் அமைந்துள்ள, "தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் 2013.08.23ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A12 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: ஆதர் பெரேரா மாவத்தை (பி.ச. வீதி) கிழக்கு:உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 19375 எனும் இலக்க நில வரைபடத்தின லொட் B தெற்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 19375 எனும் இலக்க நில வரைபடத்தின லொட் B மேற்கு: லொட் A11 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A12 என பிரித்தொதுக்கப்பட்ட காணியின் பரப்பளவானது பன்னிரண்டு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.12) ஆகும்.

4. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லையின் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 213 பட்டுவத்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டுவத்த கிராமத்தில் அமைந்துள்ள, "தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் 2013.08.23ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A13 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன் வடக்கு: லொட் A12 கிழக்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 19375 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் B தெற்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பி. ஜயசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 19375 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் B மேற்கு: லொட் A11 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த 19431 எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் A13 என பிரித்தொதுக்கப்பட்ட காணியின் பரப்பளவானது ஏழு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.7) ஆகும்.

இந்த ஆதனங்களானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015 ஒக்டோபர் 12ம் திகதியிடப்பட்ட 865ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட நான்காவது ஆதன அட்டவணை:**

தென் மாகாணம், காலி மாவட்டம் காலி காணி பதிவாளர் பிரிவில் தல்பே பத்துவில் யக்கலமுள்ள பிரதேச சபை எல்லையின் யக்கலமுள்ள பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 182D மாகெதர கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகெதர கிராமத்தில் அமைந்துள்ள, "தெஹிகஹஹேன" என அழைக்கப்படும் காணியானது கொடை இல. R 2097 இல் விபரிக்கப்பட்டுள்ள 549ம் இலக்க இறுதி கிராம நிலவரைபடத்தில் (FVP) லொட் 1148 மற்றும் 1542 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: லொட் 1538 கிழக்கு: போப்பிட்டிய கிராமம் மற்றும் லொட் 1206 தெற்கு: புஞ்சி தெஹிகஹஹேன நெடுகிலுமான ஒதுக்கீடு, 1415 ஒதுக்கீடு மற்றும் எல்ல இஹல தொல் நெடுகிலுமான ஒதுக்கீடு மேற்கு: லொட் 1145, 799, 1539 மற்றும் தெனிமுல்லே மலதொல நெடுகிலுமான ஒதுக்கீடு ஆகிய எல்லைகளைக் கொண்ட 1949.09.08ம் திகதி அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட FVP 549 இல் இலக்கம் 8 மற்றும் FB இலக்கம் 75833 எனக் குறிக்கப்பட்ட குறிப்பின் பிரகாரம் குறித்த காணியின் பரப்பளவானது நாற்பத்திரண்டு ஏக்கர் ஒரு றூட் மற்றும் முப்பத்திரண்டு பேர்ச் (ஏ.42-றூ.1-பே.32) ஆகும்.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டி.டி.ஜே.எஸ். மாயாதுன்ன என்பவரால் 2018.01.30ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1360 ம் இலக்க உரித்துறுதியில் ஒதுக்கப்பட்ட உறுப்புரை இலக்கங்களான ஒன்று (01) மற்றும் இரண்டு (02) மற்றும் ஒன்று முதல் பன்னிரண்டு (01-12) வரையிலான நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 பெப்ரவரி 14ம் திகதியிடப்பட்ட 1465ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

(திருமதி) வீ.ஏ. பரணகம
சட்டத்தரணி,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்



# ஆசிய இளையோர் மெய்வல்லுனர்: இலங்கைக்கு நான்கு பதக்கங்கள்

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற 5ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட அம்பகமுவ மத்திய கல்லூரியின் அயோமால் அகலங்க வெண்கலப் பதக்கம் வென்றார்

இந்தப் போட்டியை 51.40 விநாடிகளில் நிறைவுசெய்து தனது அதிசிறந்த காலத்தையும் அவர் பதிவு செய்தார்.

அதுமாத்திரமன்றி, இம்முறை ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் இலங்கைக்கான 4ஆவது பதக்கத்தையும் அவர் வென்று கொடுத்தார்.

17 வயதான அயோமால் அகலங்க, முன்னதாக 20 வயதுக்குட்பட்ட ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பங்குபற்றுவதான அடைவு மட்டத்தையும் பூர்த்தி செய்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இதனிடையே இந்தப் போட்டியை 50.91 விநாடிகளில் நிறைவு செய்த கட்டார் வீரர் மஹமத் அபகர் முதலிடத்தையும், 51.38 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்த இந்திய வீரர் பாபி சன்ஸ்தா இரண்டாவது இடத்தையும் பெற்றனர்.

இதன்படி, கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த 5ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 4 பதக்கங்களை வென்றது. இதில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி வீரர் துஷேன் சில்வா, ஆண்களுக்கான உயரம் பாய்தலில் திக்வெல்ல விஜித மத்திய கல்லூரியைச் சேர்ந்த நிலுபுல் பெஹசர மற்றும் பெண்களுக்கான 800 மீற்றர் போட்டியில் கம்பளை விக்ரமபாகு தேசிய பாடசாலையைச் சேர்ந்த கசுனி நிர்மலி விக்ரமசிங்க ஆகியோர் பதக்கங்களை வென்றனர்.

## றஹீமிய்யா அணி வெற்றி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று கொமியுனிட்டி கட்டார் அமைப்பினால் கட்டார் நாட்டில் கடந்த ஆறு வருடங்களாக நடாத்தப்பட்டு வருகின்ற ஏ.கே. பி.சீ.கியூ கிரிக்கெட் சம்பியன் தொடரில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டு கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

எட்டு அணிகள் பங்கு கொண்ட இந்தத் தொடரின் இறுதிப்போட்டி கட்டாரில் கடந்த வெள்ளிக்கிழமை (28) இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் றஹீமிய்யா அணியும் ஐகோன் அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐகோன் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 54 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றஹீமிய்யா அணி இரண்டு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கையடைந்தது.

## 1000ஆவது ஐ.பி.எல் போட்டி: மும்பை இந்தியன்ஸ் வெற்றி



ஆயிரமாவது ஐ.பி.எல் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை மும்பை இந்தியன்ஸ் 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

வென்கடே மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் யெஷாஸ்வி ஜெயிஸ்வால் 62 பந்துகளில் 124 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் அந்த அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 214 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. சூரியகுமார் யாதவ் அதிரடியாக 29 பந்துகளில் 55 ஓட்டங்களை விளாசினார்.

## வவுணதீவு பிரதேச செயலக புதுவருட விளையாட்டு விழா



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தின் புதுவருட விளையாட்டு விழா அண்மையில் (26, 27) நாவற்காடு பாரத் விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலாளர், கணக்காளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிருவாக உத்தியோகத்தர் தலைமையில் 4 அணிகளுக்கு இடையே போட்டிகள் இடம்பெற்றன. இதில் எல்லே, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகள் இடம்பெற்றன.

கணக்காளர் தலைமையிலான நீலநிற அணி 158 புள்ளிகளைப் பெற்று முதலிடமும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தலைமையிலான பச்சை நிற அணி, பிரதேச செயலாளர் தலைமையிலான சிவப்பு நிற அணி முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை பெற்றன.

## துருக்கி தாக்குதலில் ஐ.எஸ் தலைவர் பலி



சிரியாவில் இஸ்லாமிய அரசு குழுவின் (ஐ.எஸ்) தலைவர் என சந்தேகிக்கப்படும் அபூ ஹுஸைன் அல் குரைசியை துருக்கிப் படை கொன்றதாக துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ் குழுவின் முன்னாள் தலைவர் அண்மையில் கொல்லப்பட்ட நிலையிலேயே அவரைத் தொடர்ந்து வந்தவரும் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துருக்கி உளவுப் பிரிவால் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஒன்றிலேயே ஐ.எஸ் தலைவரை செயலிழக்கச் செய்ய முடிந்ததாக எர்துவான் டீ.ஆர்.டீ துர்க் தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் ஐ.எஸ் தரப்பில் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

துருக்கி எல்லைக்கு நெருக்கமாக உள்ள வடக்கு நகரான ஜன்தரிஸிலேயே இந்த நடவடிக்கை இடம்பெற்றிருப்பதாக சிரிய தரப்புகளை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த நவம்பரில் ஐ.எஸ் தலைவர் அபூ அல் ஹசன் அல் ஹஷ்மி அல் குரைசி மரணித்த அறிவிப்பை அந்தக் குழு வெளியிட்டது. 2022 ஒக்டோபர் நடுப்பகுதியில் தென்மேற்கு சிரியாவில் சுயாதீன சிரிய இராணுவ கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்கா குறிப்பிட்டது.

வட கிழக்கு சிரியாவில் இருந்து வடக்கு ஈராக் வரை நீண்ட 88,000 கிலோமீற்றர் நிலப்பகுதியை முன்னர் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஐ.எஸ் குழு தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த சுமார் எட்டு மில்லியன் மக்கள் மீது கொடிய சட்டங்களை செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## சூடானில் மோதலுடன் போர் நிறுத்தம் நீடிப்பு

சூடானில் பொதுமக்கள் வெளியேறுவதை அனுமதிக்கும் வகையிலான போர் நிறுத்தம் ஒன்றுக்கு மத்தியிலும் தலைநகர் கார்டூமில் கடுமையான வான் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. எதிராளியான துணை இராணுவப் படையை தலைநகரில் இருந்து வெளியேற்றுவதற்காக தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

போர் நிறுத்தத்தை மூன்று நாட்களுக்கு நீடிக்கப்பட்டதாக போர் தரப்புகள் கூறியபோதும் தொடர்ந்து உக்கிர மோதல் நீடித்து வருகின்றன.

இந்த மோதல்களில் 500க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக கூறப்பட்டபோதும் உண்மையான எண்ணிக்கை கூறப்படுவதை விடவும் மிக அதிகமாக இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. கார்டூமில் தொடர்ந்து மில்லியன் கணக்கான மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் அப்தல் பத்தா அல் புர்ஹான் மற்றும் துணை இராணுவப் படையான விரைவு உதவிப் படை தலைவர் முஹமது ஹம்தான் டகாலோ இடையிலான அதிகாரப் போட்டியே இந்த மோதலுக்குக் காரணமாகும். குறிப்பாக துணை இராணுவப் படையை இராணுவத்துடன் இணைப்பது தொடர்பில் முரண்பாடு வெடித்துள்ளது.

அண்டை நாடுகள் மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐ.நாவின் தீவிர இராஜதந்திர முயற்சியை அடுத்தே இரு ஜெனரல்களும் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கினர். அந்தப் போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டபோதும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இந்நிலையில் அமெரிக்கா மற்றும் சவூதி அரேபிய மத்தியஸ்தர்கள் அங்கு சென்றிருக்கும் நிலையில் அடுத்த கட்ட நகர்வு பற்றி தெளிவின்றி உள்ளது.

கடந்த ஞாயிறன்று (30) போர் நிறுத்தத்தை நீடிக்கும் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர், நகர மையத்தின் வடக்கில் உள்ள துணைப் படை துருப்புகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தியதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

தலைநகரில் துணைப் படைக்கு எதிராக இராணுவம் ஆளில்லா விமானம் மற்றும் போர் விமானங்கள் மூலம் தொடர்ந்து குண்டு மழை பொழிந்து வருகிறது. இதனால் அங்கு விநியோகங்கள் ஸ்தம்பித்து, மருத்துவ சேவைகளும் முடக்கப்பட்டுள்ளன.

## எலி கொஹேன் இந்தியா வருகை



இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் எலி கொஹேன் எதிர்வரும் மே 9 ஆம் திகதி இந்தியா விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

வர்த்தகம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை பலப்படுத்துவதாக இந்த விஜயம் இடம்பெறவுள்ளது. கடந்த டிசம்பரில் பதவி ஏற்ற பின்னர் கொஹேன் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயமாக இது அமையவுள்ளது.

## அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்துள்ளது தாய்வான்

### சீனாவின் வான் ஆற்றலுக்கு தாய்வான் ஈடாகாது என்றும் தெரிவிப்பு

தாய்வானின் விமானப்படைக்கான உதிரிப்பாகங்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையிலான இரண்டு இராணுவ ஒப்பந்தங்களை அந்நாடு அமெரிக்காவுடன் செய்துகொண்டுள்ளது. 323 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலாவது ஒப்பந்தம் விமான உதிரிப்பாக விநியோகத்துக்காகவும் இரண்டாவது, விமான பராமரிப்பு தொடர்பானதாகவும் அமைந்துள்ளதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ள வொய்ஸ் ஒப் அமெரிக்கா, ஒப்பந்தங்களின் மொத்த பெறுமதி 420 மில்லியன் டொலர்கள் என்றும் 2028 வரை இவை செல்லுபடியாகும் என்றும் தெரிவித்துள்ளது.

தாய்வான் மாகாணம் சீனப் பெருநிலத்தில் இருந்து பிரிக்க முடியாத ஒரு அங்கம் என்று சீனா கூறிவரும் நிலையில் தாய்வான் விமானப்படையை மேம்படுத்தும் இந்த ஒப்பந்தங்கள் அமெரிக்காவுடன் செய்துகொள்ளப்பட்டுள்ளன.

இதேசமயம் பென்டகனில் இருந்து கசிந்த சில இரகசிய தகவல்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ள வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை, ஒரு சீன விமான தாக்குதலை எதிர்கொள்ளும் நிலையில் தாய்வான் இல்லை என்றும் தாய்வானின் விமான தளங்கள் மற்றும் ராடார் நிலையங்கள் அனைத்துமே சீன ஏவுகணை பாய்ச்சலுக்கு உட்பட்டவையாகவே காணப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளது. எனினும் இந்த ஆவணங்களில் கூறப்பட்டுள்ளவை உண்மை நிலைக்கு மாறானவை எனவும் தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளதாக வொய்ஸ் ஒப் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

## 'காஷ்மீரில் பஞ்சாயத்துகள் சிறப்பாக செயல்படுகின்றன'

ஜம்மு காஷ்மீரில் 2018 ஆம் ஆண்டில் பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் மத்திய அரசு இதுவரை 22 ஆயிரம் கோடி ரூபாவை பஞ்சாயத்துகளின் ஊடான கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் பஞ்சாயத்து கட்டமைப்பு மேம்பாட்டுக்காகவும் செலவிட்டுள்ளதாக காஷ்மீர் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாயத்து தேர்தல்களை நடத்த பிரதமர் நரேந்திரமோடி தீர்மானித்த போது காஷ்மீரின் இரண்டு முன்னாள் முதல்வர்களான ஃபாருக் அப்துல்லாவும், மெஹ்பூபா முப்டியும் அதை பலன்தராத வேலை என வர்ணித்ததோடு அவர்களின் தேசிய மாநாட்டு கட்சியும், மக்கள் ஜனநாயகக் கட்சியும் அத் தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை என்பதை சுட்டிக் காட்டும் அந்த அதிகாரி, பஞ்சாயத்துகளின் செயற்பாடுகளால் காஷ்மீர் கிராமங்கள் அபிவிருத்தியை நோக்கி நகர்வதைக் கவனித்த ஃபாருக் அப்துல்லா, பஞ்சாயத்து தேர்தல்களை புறக்கணித்தது தவறு என்பதை 2021 இல் ஒப்புக்கொண்டதை நினைவுபடுத்தினார்.

1947 முதல் 2019 வரை காஷ்மீரை ஆட்சிசெய்தவர்கள் தமது அதிகாரங்களை கடைக்கோடி கிராமங்களோடு பகிர்ந்துகொள்ள முன்வரவில்லை என்றும் தற்போது பஞ்சாயத்துகள் கிராம மட்டத்தில் செயற்பட ஆரம்பித்திருப்பதால் சாதாரண கிராம வாசியும் அதனால் பயன்அடையத் தொடங்கியிருப்பதை பார்க்க முடிவதாகவும் பஞ்சாயத்து முறைக்கு பொறுப்பான ஸ்ரீநகர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தேசிய பஞ்சாயத்து தினத்தை முன்னிட்டு கடந்த ஏப்ரல் மாதம் ஜம்முவின் சம்பா மாவட்ட பள்ளி கிராமத்துக்கு பிரதமர் மோடி விஜயம் செய்ததோடு நாட்டின் ஜனநாயகம் மற்றும் உறுதிப்பாட்டுக்கு ஜம்மு காஷ்மீர் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தியிருப்பதாக புகழ்ந்துரைத்தார்.

## உக்ரைன் நகரங்கள் மீது ரஷ்யா மீண்டும் சரமாரி வான் தாக்குதல்

உக்ரைனிய நகரங்க மீது ரஷ்யா மூன்று நாட்களுக்குள் இரண்டாவது முறையாக சூரியோதயத்திற்கு முன்னர் நேற்று (01) ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

உக்ரைனின் பதில் தாக்குதல் நடவடிக்கை ஒன்று எதிர்பார்க்கப்படும் வேளையில் ரஷ்யாவின் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

டினிப்ரு நகர மையத்திற்கு அருலுள்ள பவ்லோஹார்டில் இருக்கும் ஏற்பாட்டியல் மையம் ஒன்றின் மீது சரமாரி தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் பல டஜன் வீடுகள் சேதமடைந்திருப்பதோடு 34 பேர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் கீவ் உட்பட நாடெங்கும் வான் தாக்குதல் எச்சரிக்கை சமிக்ஞைகள் வெளியிடப்பட்டுள்ளன. 15 தொடக்கம் 18 வரையான க்ரூஸ் ஏவுகணைகள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதில் முன்னரங்குப் பகுதியில் இருந்து சுமார் 70 மைல் தொலைவில் இருக்கும் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள பல்லோஹார்ட் நகர் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது.

ரஷ்யா கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய இது போன்ற சரிமாரி வான் தாக்குதல்களில் உக்ரைனில் 23 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.